விசேஷ விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

விசேஷ விளம்பரத்திற்கு!

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ௫௩] யாழ்ப்பாணம்:— விஷு ௵ ஆவணி மீ ௧௧ ௨ (1941 ஆக்கஸ்ட் 28 வியாழக்கிழமை) [இலக்கம் ௩...]

## அன்பும் சமயமும்

(மாவிட்டபுரம் சிவஸ்ரீ ஸ். குமாரஸ்வாமிக்குருக்கள் அவர்கள்)

சமயமாவது கடவுளை அடைதற்குரிய மார்க்கம். ஆகவே, சைவசமயமாவது சிவபெருமானை அடைதற்குரிய மார்க்கமாம். வேதசிவாகமங்களில் விலக்கப்பட்டனவாகிய பாவங்களை நீக்கி, அவைகளால் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்தல் ஒவ்வொரு சைவசமயியினதும் கடனாகும். நாம் பூர்வஜன்மத்திற் செய்த புண்ணியவசத்தினாலே புண்ணிய பூமியாகிய இப் பரதகண்டத்திலே பல்வகைச் சமயங்களுள்ளும் மேலான சைவசித்தாந்த சமயத்திலே பிறந்திருக்கின்றோம். பெறுதற்கரிய மானுடயாக்கையைப் பெற்றும் சமயநெறி நின்று ஒழுகுதற்குத் தவறுவோமாயின் மாக்களுக்குச் சமானமாவோமன்றோ? நாம் வேத சிவாகமங்களைச் சந்தேகவிபரீதமறக் கற்றிருக்கலாம். ஆயினும், "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்" என்று திருவள்ளுவர் கூறியாங்கு நாம் முழுமுதலாகிய பரம்பொருளை வணங்கத் தவறுவோமாயின் நாம் கற்றதினால் யாது பயன்? சிவபெருமான் இந்த மானிட சரீரத்தை எங்களுக்குத் தந்தருளியது தம்மை மனதினாலே சிந்திக்கவும், நாவினாலே துதிக்கவும், தம்மாலதிட்டிக்கப்படும் குருலிங்க சங்கமம் என்னும் மூவகைத் திருமேனியையும் கண்களினாலே தரிசிக்கவும், கைகளினாலே பூசிக்கவும் கும்பிடவும், தலையினாலே வணங்கவும், கால்களினாலே வலஞ் செய்யவும், தமது பெருமையையும் தமது சிவனடியார் பெருமையையும் காதுகளினாலே கேட்கவுமேயாம். சிவபெருமான் அன்பு வடிவாயிருத்தலினாலும், அன்பின்றேல் சிவபெருமான் இல்லையாதலாலும், நாம் அவருக்குச் செய்யும் துதிகளும் வணக்கங்களும் அன்போடு கூடியவைகளாயிருத்தல் வேண்டும். இதனை,

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே.

என்னுந் திருமந்திரத்தா லறியப்படும்.

இனி, அன்பாவது யாதோவெனின், ஒருவருக்குத் தம்மோடு தொடர்புடையவராய்த் தமக்கு இனியவராய் உள்ளவரிடத்தே நிகழும் உள்ளநெகிழ்ச்சியாம். பசுக்களாகிய நாம் அநாதியே மலத்தினால் மறைக்கப்பட்டுள்ள அறிவுந் தொழிலும் உடையவர்களாய், தம் வயத்தரல்லாதவர்களாய் இருக்கின்றோம். அன்புருவாகிய சிவபெருமான் அநாதியே நம்முடன் இரண்டறக் கலந்துநின்று, நமக்கெல்லாம் நித்தியானந்தப் பெருஞ்செல்வத்தைத் தந்தருளவிரும்பி, தந்தொழில்களெல்லாம் தம் பயன் சிறிதுங் குறையாது நம் பயன் குறித்த தொழில்களாகவே கொண்டு பெத்தநிலையிலே தாம் நம்முள்ளே மறைந்து நின்று நமக்குப் பின்னாகியும், முத்திநிலையிலே நம்மைத் தம்முன்னே படைத்துத் தாம் நமக்கு முன்னாகியும் இப்படியே என்றும் உபகரிக்கும் இயல்புடைய பெருங் கருணைக்கடலாயிருக்கின்றார். ஆதலினால், அவரொருவரே நம்முடன் தொடர்புடையவர். அவரே நமக்கு எப்பொழுதும் இனியவராய் உள்ளவர். அவருக்கே நாமெல்லாம் உடைமைப்பொருள். ஆதலின், அவரிடத்திற்றானே நாமெல்லோரும் அன்பு செய்தல் வேண்டும்.

அதாவது இவ்வுலகத்தில் ஊசி முதலானவைகள் தாமாகவே காந்தம் முதலானவைகளிலே படைந்து பற்றிக் கொள்ளுவதுபோல, மனமானது பரமசிவனுடைய திருவடித் தாமரைகளிலே பற்றுள்ளதாயிருப்பதுதான் பக்தியெனப்படும் எனது சங்கராசாரியசுவாமிகள் தம்பு ஆனந்த லஹரியில் விவரிக்கின்றார்.

இம் மனித சரீரம் பெறுதற்கரிதாதலாலும், இது இக்கணம் இருக்கும், இக்கணம் நீங்கும், இவ்விடத்தழியும் பின் இப்பிறவி யெடுக்குமென்றறிதற்கரிதாகிய நிலைமையுடையதாதலாலும், நாம் எக்காலத்தும் எவ்விடத்தும் எப்பிறவியிலும் பக்தி செய்தல் வேண்டும்.

ஓ ஈசுவரனே! மலைக்குகையிலோ, வெளிப்பிரதேசத்திலோ, வீட்டிலோ, காட்டிலோ, மலையினுச்சியிலோ, நீரிலோ, நெருப்பிலோ, எவ்விடத்திலிருந்தாலும் சரி, எனது மனமானது எப்போதும் உன்னுடைய சரணாவிந்தத்தில் பக்தியுடையதாயிருக்கட்டும். அப்பொழுதுதான் நான் பரமயோகியாவேன் என்று சங்கரர் சிவபிரானை வேண்டுகின்றார்.

சிவபெருமான் அரூபியாயிருக்கவும், அவரைத் தரிசிக்கப் பெறாத ஆன்மாக்களுக்கு அவர்மீது யாங்ஙனம் அன்பு விளையுமோ எனின், பசுக்களாகிய நாம் நம்முடைய இலக்கணங்களையும், நம்மைப் பந்தித்த பாசங்களின் இலக்கணங்களையும், சர்வான்மாக்களுக்கும் தலைவராகிய சிவபெருமானது இலக்கணங்களையும் சிந்திக்க வேண்டும். அரிபிரமேந்திராதி தேவர்களுக்குங் கிட்டுதற்கரிய சிவபெருமான் சிறறிவும் சிறுதொழிலும் உடையோராகிய நமக்கெல்லாம் இரங்கி எளிவந்து ஓயாது உபகரிக்குங் கருணையையும் சிந்திக்கவேண்டும். இத்தகைய சிவபெருமானின் கருணையிற் கோடியில் ஒருபங்கு தானும் உரியவர் பிறரொருவர் நமக்கிலராமையையும் இடையறாது சிந்திக்கச் சிந்திக்க நமக்குச் சிவபிரானிடத்து அன்பு விளையும். இங்ஙனம் அன்பு வளரவளரச் சிவபெருமானை நினைக்குந்தோறும், அவரது திருவிளையாடல்களைக் கேட்குந்தோறும் ஆனந்த பாஷ்பம் சொரியும். உரை தடுமாறும். நாத் தழுதழுக்கும். பக்தியென்னுந் தாயானவள் பக்தனென்னும் குழந்தையை ஆனந்தக்கண்ணீரால் புளகாங்கிதமாகக் குளிப்பாட்டி நிர்மலபாவமெனனும் வஸ்திரத்தையுடுத்தி, வாக்காகிய சங்கத்தினால் சிவபெருமானது சரிதாமிர்தமாகிய பாலைப் புகட்டி, உருத்திராக்ஷமாகிய ஆபரணத்தால் அலங்கரித்து, விபூதியாகிய பொட்டிட்டு, சிவபெருமானது தியானமாகிய தொட்டிலிலிட்டுக் காப்பாற்றுகிறாள்.

ஆன்மாக்களது அறிவுக்கும் அவர்களது பரிபக்குவங்களுக்கேற்பவும் அன்பு பலதிறப்படும். அது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்குவகைத்து. இவற்றுள் மந்ததரபக்தியாவது அரக்குவெயிலில் வைக்கப்பட்டால் இளகுவதை ஒப்பது. மந்தபக்தியாவது வெய்யிலுக்கு எதிர்ப்படின் இளகும் மெழுகை ஒக்கும். தீவிரபக்தியாவது சூடுபட்டவுடன் நெய்யானது இளகுவதை ஒப்பது. தீவிரதரபக்தியாவது என்றும் இடையறாது ஒழுகிக் கொண்டிருக்கும் தைலதாரையை ஒப்பது.

மேலும், அன்பானது மெய்யன்பு பொய்யன்பு என்றும் தலையன்பு இடையன்பு கடையன்பு என்றும் பலதிறத்தாம். இவற்றுள் மெய்யன்பாவது தன்னலங் கருதாது கடவுளருளால் உண்டாகும் பரிசுத்த குணங்களுள் ஒன்று. இம் மெய்யன்பானது எல்லாப் பிராணிகளிடத்தும் உண்டு. மிருகங்களுட் குரூரமான புலியும் தன் குட்டிகளிடத்தில் அன்பாயிருக்கின்றது. பார்ப்பதற்கு அச்சத்தைக் கொடுக்கும் விஷம் பொருந்திய நாகமும் தன் குட்டிகளிடத்தில் அன்பாயிருக்கிறது. இங்ஙனமே பக்ஷிகளுள்ளும் மிருகங்களுள்ளும் மனிதர்களுள்ளும் தாய் தந்தையர் தங்கள் குழந்தைகளிடத்தில் அன்பாயிருக்கிறார்கள். அங்ஙனமே குழந்தைகளும் இருக்கிறார்கள். நாம் நமது தாய் தந்தையரிடத்தில் அன்புள்ளவர்களாயிருக்கும் நமது பரமபிதாவாகிய சிவபெருமானிடத்தில் எத்துணை அன்பு பூண்டிருத்தல் வேண்டும். இத்தகைய அன்பே மெய்யன்பெனப்படும். இதற்கு மாறாகப் பிரதிபலன் கருதிச் செய்வதும், ஆணவத்தினால் உந்தப்பட்டுச் செய்வதுமாகிய அன்பு பொய்யன்பு எனப்படும். ஒருவன் இன்னொருவனிடத்துள்ள பொருளை அபகரித்தற்கு ஆவலுடன் இதமாய்ப் பேசி நன்மை செய்பவன் போற் பாசாங்கு செய்கிறான். வெளித்தோற்றத்துக்கு அவன் செய்வது அன்புபோல் தோற்றினும் அது உண்மையில் வஞ்சகச் செயலேயாம்.

ஒரு நாயகி தனது நாயகன் இறந்தான் என்ற செய்தி செவியிற் புகுமுன்னரே உயிர் துறப்பாளாயின் அவளது அன்பு தலையன்பு எனப்படும். இதற்குக் கந்தபுராணத்திலே சூரபன்மன் இறந்தான் என்ற செய்தி கேட்டமாத்திரத்திற்றானே அவன் மனைவி பதுமகோமளை உயிர்துறந்தாள் என்றதே போதிய சான்றாகும். நித்தியமுங் கொலைத்தொழிலே புரிந்து வந்தவரான கண்ணப்பர் இறைவனைக் கண்டமாத்திரத்தே அன்புருவாயினாரன்றோ! சிவபெருமான் தமது கண்ணினின்று நீர்வடியும்படி செய்தது தன்னடியாரின் பக்தியைச் சோதிப்பதற்காகவேயாம். கண்ணப்பரும் ஊனுக்கு ஊனிடுதலே தகுதியென்று நினைத்து தமக்கு நேரும் வருத்தத்தையுந் துடிதுடிப்பையுஞ் சிறிதும் எண்ணாது தமது கண்ணொன்றைக் கல்லி எடுத்து சிவபிரானது கண்ணுக்கு ஈடுகொடுத்தார். இத்தகைய அன்பவரே தலையன்பராகும். ஒரு நாயகி தனது நாயகன் இறந்ததைக்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## பிரிட்டனுக்கு உதவி செய்யும் சண்டைக் கப்பல்கள்

### கடற்படை மந்திரியின் அறிக்கை

லண்டன் ஆக 23

பிருத்தானிய கடற்படை மந்திரியான திரு. ஏ. வி. அலெக்ஸாண்டர் வெள்ளிக்கிழமை இரவு ரேடியோவிற் பேசிய பொழுது சாக்குக் கப்பல்களுக்குத் துணையளித்து வருவது பற்றியும், சுரங்கம் அரிப்பது பற்றியும் நீர்மூழ்கி ஒழிப்பு நடவடிக்கையைப் பற்றியும் குறிப்பிட்டார். இந்தச் சேவையில் பிருத்தானிய கடற்படையோடு 12,000 அதிகாரிகளும் 13,000 மாலுமிகளும் கொண்ட 190 சிறு சண்டைக் கப்பல்களும் ஈடுபட்டிருப்பதாக அவர் சொன்னார்.

## வேலர். மிர்ஸாவின் சம்மதம்

### இலங்கை-இந்திய சம்பாஷணையிற் கலந்து கொள்ளுவார்

பங்களூர் ஆக 23

மைசூர்ப் பழைய திவானாகிய ஸேர். கிர்ஜா சங்கர் பஜ்பாய் தலைமையில் இலங்கைக்குச் செல்லும் இந்திய கோஷ்டியிற் சேர்ந்து சேவை புரிவதற்குச் சம்மதித்து விட்டதாக அறியப்படுகிறது.

இம்மாதக் கடைசியில் அவர் சென்னைக்குப் போய், அங்கு இந்தியக் கோஷ்டியின் மற்ற அங்கத்தவர்களோடு சேர்ந்து கொள்ளுவார். இந்தியத் தூதுக் கோஷ்டி இலங்கையில் இரண்டு வாரம் தங்கியிருக்கலாமென்று தெரிகிறது.

## அரிசிக்குத வேலை நிறுத்த விசாரணை

### கூலி விகிதத்தை உயர்த்தக் கொம்மிஷனரின் சிபார்சு

அண்மையில் நடைபெற்ற பூர்த்தே சட்ட அரிசிக்குத வேலை நிறுத்தம் பற்றி விசாரணை செய்வதற்குக் கொம்மிஷனராக நியமிக்கப்பட்ட மிஸ்றர் எம். வி. ஜிம்ஸனின் தீர்ப்புச் சென்ற சனிக்கிழமை தொழில் மந்திரிசபை பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றில் வெளியிடப்பட்டிருந்தது. அதில் தொழிலாளிகளுக்கு விநியோகிப்பதற்காக காட்டசமைகளிடம் கொடுக்கும் கூலி விகிதம் அதிகரிக்கப்பட வேண்டுமென்று மிஸ்றர் ஜிம்ஸன் சிபார்சு செய்திருக்கிறார்.

மேற்படி அறிக்கை கூறுவதாவது:-

இந்த இடைக்காலத் தீர்ப்பு விஷயத்தில் கொமிஷன் தொழிலாளிகளின் குறைகளை எந்தவகையில் நிவிர்த்திக்கலா மென்பதிலேயே பிரதான கவனஞ் செலுத்தியிருக்கிறது.

கீழ்க்காணும் முறைகளை அநுஷ்டிப்பதால் தொழிலாளிகளின் குறைகளிற் பெரும் பகுதி நிவிர்த்தியாகிவிடுமென்று கொம்மிஷன் அபிப்பிராயப்படுகிறது.

(1) தொழிலாளிகளுக்கு விநியோகிப்பதற்காக காட்டசமைகளிடம் கொடுக்கும் தொகை அவ்விதமே விநியோகிக்கப்படுகிறது என்பதை நிச்சயப்படுத்துதல்.

(2) அரிசிக்குதம் முழுவதிலும் ஒரே மாதிரியான கூலி கொடுத்தல்.

(3) அரிசி ஏற்றுமதி இறக்குமதி செய்யும் விஷயத்தில் நேரடியான பங்கு இல்லாத சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்காகக் கூலி வெட்டப்படுவதை ரத்துச்செய்தல்.

### கூலி விகிதம் சிபார்சு

கொம்மிஷனர் தமது இடைக்காலத் தீர்ப்பில் மற்றும் பல விஷயங்களோடு கீழ்க்காணும் கூலி விகிதங்களையும் சிபார்சு செய்திருக்கிறார்.

பண்டகசாலைகளில் 160 ருத்தல் கொண்ட 20 மூடைகளை வண்டியில் ஏற்றுவதற்கு 60 சதம் 100 மூடைகளை அடுக்குவதற்கு ஒரு ரூபாய் 25 சதம்.

யுத்தத்தின் விளைவாக ஏற்பட்டிருக்கும் நிலைமை பூக்தோட்ட அரிசிக் குதத்தில் நடைபெறும் வேலையின் அளவில் எத்தகைய மாற்றத்தையும் உண்டுபண்ண வில்லையென்றும் அஃது ஒழுங்காக வேலை நடைபெற்று வருகிற தென்றும் மிஸ்றர். ஜிம்ஸன் கூறுகின்றார்.

## பட்டினசபை அங்கத்தவர் அப்பீல் கேட்கிறார்

### பயமுறுத்திய குற்றச்சாட்டில் அபராதம்

களுத்துறை ஆக 23

களுத்துறைப் பட்டினசபை அங்கத்தவரான மிஸ்றர். வி. டி. எப். குணவர்த்தனவின் மீது பயமுறுத்தியதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டுக் களுத்துறை நீதிபதியால் ரூபாய் 10 அபராதம் விதிக்கப்பட்டது.

அவர் நீதிபதியின் அநுமதியோடு தமக்களிக்கப்பட்ட தீர்ப்பை ஆக்ஷேபித்து அப்பீல் செய்திருக்கிறார்.

## லேடி கல்டிக் கொற்றுக்கு ரண சிகிச்சை

சென்ற சனிக்கிழமை யன்று லேடி கல்டிக்கொற் இலேசான ஒரு ரணசிகிச்சைக்காகப் பிரேஸர் சிகிச்சா ஸ்தாபனத்தில் அநுமதிக்கப்பட்டார். 3 அல்லது நான்கு தினங்கள்வரை குறித்த சிகிச்சா ஸ்தாபனத்தில் அவர் சிகிச்சை பெறுவாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## உள்நாட்டு உணவு உற்பத்தி

### "அதிகரிக்க, வேலையற்றவர்களைக் கட்டாய சேவைக்கு அமர்த்துக"

### "கோட்டாச் சட்டத்தை நீக்க வேண்டும்"

யாழ்ப்பாணம் ஆக 23

திரு எஸ். பொன்னம்பலம் தலைமையில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றிற் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேறறப்பட்டன:-

உள்நாட்டு உணவுப்பொருள் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக இப்பொழுது நடைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் கோட்டாச் சட்டம் அதன் நோக்கத்தில் வெற்றி பெறவில்லை. அச்சட்டம் அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சந்தர்ப்பம் அளிக்காதிருப்பதால் அச்சட்டத்தை நீக்கிவிட்டு அதன் நோக்கங்களைக் கீழ்க்காணும் முறைகளைக் கையாண்டு நிறைவேற்றும்படி தேசாதிபதியைக் கேட்டுக் கொள்ள இச்சபை தீர்மானிக்கின்றது:-

(1) செக்கண்டரிப் பாடசாலைகளிற் கல்வி கற்று வேலையில்லாதிருப்பவர்களின் புள்ளி விபரங்களையும் அவர்களின் குடும்பங்களின் பொருளாதார நிலைமை பற்றிய விபரங்களையும் தயாரித்தல்.

(2) வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய நிலத்தில் இந்த வேலையில்லாதவர்களை கட்டாய சேவைக்கு அமர்த்துவதற்கு வேண்டிய சட்டத்தை நிறைவேற்றுதல்.

(3) நிபுணர்களைக் கொண்டு ஒரு விரிவான திட்டத்தைத் தயாரிப்பதற்கும் இந்த வேலையற்றவர்களைக் குடியேற்றுவதற்கும் வேண்டிய செலவுகளுக்காக மான்யம் ஒதுக்குதல்.

(4) வேலையற்றோர் குடியேற்றத்தைத் தீவிரப் படுத்தும் நோக்கத்தோடும் தேசாதிபதி தமக்கு அளிக்கப்பட்டிருக்கும் விசேஷ அதிகாரத்தைக் கொண்டு இச்சட்டத்தைப் பிரகடனஞ் செய்தல்.

மனிதசுதந்திரம் கட்டாய சேவையால் எவ்வளவுக்குப் பாதிக்கப்படுகிறதோ அவ்வளவுக்குக் கோட்டாச் சட்டம் நடையில் இருப்பதாலும் பாதிக்கப்படுகிறதென்று இக்கூட்டம் தெரிவிக்கிறது. ஆயின், இத் திட்டம் இலங்கைக்கு நிரந்தரமான சுபிட்சத்தை யுண்டு பண்ணும்.

திருவாளர்கள் சிற்றம்பலம் (அத்வகேற்) T. N. சுப்பையா, கே. நடராஜா ஆகியோர் உட்படப் பலர் சொற்பொழிவாற்றினர்கள்.

## திருவள்ளுவர் சமயம்

மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் வேலணைகிழார் திரு. க. வேந்தனார் அவர்கள்

(முற்றொடர்)

இனிப் "பூதவாதமும்" இங்ஙனே உலோகாயதன் கொள்கைகள் யாவற்றையும் ஏற்றுக்கொண்டு அவ்வுலோகாயதன் கொள்ளாத வான் தன்னையுஞ் சேர்த்துப் பூதங்கள் ஐந்தெனக் கொள்ளும், ஆகவே உலோகாயதமும் பூதமும் தம்முட் பெரிதும் வேறுபாடில்லாதனவாதல் தெளிவு.

மற்றினி நிறுத்த முறையே ஆசிரியர் திருவள்ளுவர் உலோகாயதம், பூதம், என்னு மிச்சமங்களைக் கைக்கொண்டொழுகினரோ, வென்பதை யாய்ந்து காண்பாம். ஆசிரியர் நிலம், நீர், தீ, கால், விசும்பு எனும் பெரும் பூதங்களுந் தோற்றற்கிடமாம்.

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகை தெரிவான் கட்டே யுலகு"

எனக் கூறுதலானும்,

"வஞ்ச மனத்தான் படிற் றொழுக்கம் பூதங்கள்
ஐந்து மகத்தே நகும்"

எனக் கூறிப் பூதங்கள் ஐந்தேயெனச் சிறந்தெடுத்துக் கிளத்தலானும் அவர் உலோகாயத சமயத்தவரன்றென்பது தெளிவு.

இனி யாசிரியர் திருவள்ளுவர் "அகர முதல வெழுத்தெல்லா, மாதி பகவன் முதற்றே யுலகு" எனுங் குறளின்கண் காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறுதலின், முதற்கண்ணே யவப்பூதவாதிக் குடன்பாடல்லாத கருத்தளவை (அநுமானத்தை)த் தழுவுகின்றார். மேலும் அப்பூதவாதி ஐம்பூதங்களின் கலப்பானவிவ்வுடம்பே உயிராகுமென்று கூறும் உடம்பே யுயிரெனும் கொள்கையாகிய "தேகான்ம வாதத்தை" யுடன்படாது, உடம்பின் வேறாக வுயிர் உண்டென்னு முண்மையைத் திருவள்ளுவர் நன்கு வலியுறுத்துகின்றார். இதனைக், "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே யுடம்போ டுயிரிடை நட்பு" எனவும், "தன்னுயிர்க்குத் தன்னுயிர் நீப்பானை யேனைய மன்னுயிரெல்லாந் தொழும்" ... தேனுலகு" எனவும், "உயிருடம்பி னீக்கியாரென்ப செயிருடம்பிற் செல்லாத் தீவாழ்க்கையவர்" எனவும், உடம்போ டுயிரிடையென்ன மற்றன்ன மடந்தையொ டெம்மிடை நட்பு" எனவும், வருமவ்வாசிரியர் கூற்றுகளில் வைத்தறிந்துகொள்ளலாம். இன்னுமப் "பூதவாதிகள்" இறந்தவுயிர் மீளப் பிறவாதெனக் கூறுதலைத் தழுவாது, "அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது, பொன்றுங்கால் பொன்றாத் துணை" யெனக் கூறுமாற்றான், இவ்வுடம்பு நீங்கிய ஞான்றும் அறப்பயன் அவ்வுடம்பின் கண் நின்றவுயிர்க்கு மறுபிறப்பிற் சென்று துணையாம் எனவும், "வீழ்நாள் படாமை நன்றாற்றி னஃதொருவன் வாழ்நாள் வழியடைக்குங் கல்" எனக் கூறுமாற்றால் ஒருவன் செய்த அறப்பயன் அவனுக்கு வரக்கடவதாகிய பிறவிகளை வாரவொட்டாது தடுக்குமெனவும், "மகன் றந்தைக் காற்று முதவி யிவன் றந்தை யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" ... எனக் கூறுமாற்றாற் பழம் பிறவியுண்டெனவும், "ஒருமையுள் ளாமைபோ லைந்தடக்க லாற்றி னெழுமையு மேமாப் புடைத்து" ... "எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண் விழுமந் துடைத்தவர் நட்பு" ... இம்மையு மின்பந் தரும்" எனக் கூறுமாற்றால் மறுமைப் பயன் உண்டெனவும், "எனைப் பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை வீயாது பின்சென் றடும்" எனக் கூறுமாற்றான் பிறவிகள் பலவுண்டாமெனவும், "தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை யஃதிலார் மேற்கொள் வது" எனக் கூறுமாற்றான், இப் பிறப்பின்கண் தவஞ் செய்யும் பேறுபேறுடையார் தவத்தை இப்பிறப்பில் வந்தவாறு இப் பிறப்பின்கண் தவஞ் செய்யும் பேறுடையார்க்கு அதனைச் செய்தற் கேதுவாக முற்பிறவியிற் செய்த தவமுண்டெனவும், "எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்" "எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண் விழுமந் துடைத்தவர் நட்பு" "ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின் எழுமையு மேமாப் புடைத்து" "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற் கெழுமையு மேமாப் புடைத்து" "புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா திகழ்ந்தார்க் கெழுமையு மில்" "ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையும் தான் புக்கழுந்து மளறு" என வருமவற்றான் பிறப்புக்கள் ஏழாமெனவும் "அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந் தவாஅப் பிறப்பீனும் வித்து" எனக் கூறுமாற்றான், உயிர்கட்குப் பிறவிகள் இடையறாது வருமெனவும், விளக்கிக் கூறுதலானும், உடம்பு வேறு உயிர் வேறென்பதும் அவ்வுயிர்க்கு முற்பிறவி பிற்பிறவிகளும், வேறுபல பிறப்புக்களும் உளவாமென்பதும், ஆசிரியர் திருவள்ளுவருக்குக் கருத்தாதல் தெற்றெனப் புலப்படும்.

இனி இருவினையும் அவற்றாற் சேறுவாய வழுமிலவென்னும் அப் பூதவாதியின் கொள்கையை யுடம்படாது "இருள்சே ரிருவினையுஞ் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" எனவும், "தம்பொருளென்ப தம் மக்களவர் பொருள் தந் தம் வினையான்வரும்" எனவும், "கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக் கோடாமை, சான்றோர்க்கணி" எனவும், ஆகூழாற் றோன்று மசைவின்மை, கைப்பொருள் போகூழாற் றோன்று மடி" எனவும், "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்" எனவும் கிளந்தெடுத்துக் கூறுமாற்றான் ஆசிரியர் திருவள்ளுவருக்கு, இருவினையும் அவற்றின் காரணமாகிய ஊழும் உண்டென்பது துணிபாயிற்று.

இனித் துறக்க நிரயங்கள் பொய்யாமென்னும் அப் பூதவாதியின் கூற்றை மறுத்துச் "சிறப்பீனுஞ் செல்வமுமீனு மறத்தினூஉங் காக்க மெவனோ வுயிர்க்கு" எனவும் "வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப் படும்" எனவும் "அடக்க மமரருள் உய்க்கு மடங்காமை யாரிருளுய்த்து விடும்" எனவுங் கூறுமாற்றான், துறக்கத்திற் செல்லுதற்கும், நிரயத்தில் வீழ்தற்கும் அடங்குதல் அடங்காமை யிரண்டுங் காரணமாமெனவும், "அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த இன்னா வுலகம் புகல்" என்பதினால் அருளுடையார் இன்னுமை தருவதாகிய இருள்நிறைந்த நிரயத்தின்கட் புகுந்து வருந்தாரெனவும், "புத்தேளுலகத்து மீண்டும் பெறலரிதே யொப்புரவி னல்ல பிற" என்பதினால் ஒப்புரவினுஞ் சிறந்த ஒழுக்கத்தைத் துறக்கத்திலும் இவ்வுலகத்திலும் பெறலரிதாமெனவும், பலவிடத்தும் வற்புறுத்திக் கூறுதலால் துறக்க நிரயங்கள் உண்மை, ஆசிரியர் திருவள்ளுவர்க் குடன்பாடாதல் தெற்றெனத் தெளிவாகின்றது.

இனி வானகத்தின் கண் வதியும் தேவரையும், நிரயத்தின் கண் வதியும் நரகரையும் அப்பூதவாதியுரைக் கொள்ளாது, மறுக்கும் கொள்கைக்கு ஆசிரியர் திருவள்ளுவர் உடன்பாடல்லாத கொள்கை யினராதலைச்" சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கு மீண்டு" தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங் கைம்புலத்தாறோம்பல்" "பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்புப் புத்தேளிர் வாழு முலகு" "நிலவரை

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு வருஷம் ஆவணி மீ ௧௩௨ வியாழக்கிழமை


## ஈருன் நாட்டின் நிலைமை

ஈருன் எனப்படுவது பழைய பாரசீக நாடாகும். இதன் நிலைமை இப்பொழுது இருதலைக் கொள்ளி யெறும்பின் நிலைமையில் இருக்கின்றது. சிறிய மீன்களெல்லாம் பெரிய மீனுக்கு இரையென்ற விதமாக, இப்பொழுது நடந்துவரும் கொடிய யுத்தத்திலே சிறிய நாடுகளெல்லாம் பெரிய தத்துவ ராச்சியங்களுக்கு இரையாகவேண்டி யிருக்கிறது; இந்தப் பாரசீகம் இருக்கும் தானம் ஒரு பிரதானமானதாகும். ஜர்மனியருடைய ஆதிக்கம் பாரசீகநாட்டிற் செல்லுமானால் ஜர்மனியர் அது வாயிலாகப் பிருத்தானிய சக்ராதிபத்தியமாகிய இந்தியா நாட்டிற்குப் படையெடுத்து வருதல் இலகுவாகுமெனப்பிருத்தானியர் அஞ்சுகின்றனர்; அல்லாமலும் பாரசீகமோ எண்ணெயோடும்பலவகையானஉணவுப் பொருள்களோடுங் கூடிய ஒரு செல்வமான நாடாகும். இவைகளை ஜர்மனியர் கவர விரும்புவரென்றெண்ணுவது பிழையல்ல. இப்பொழுது எகிப்து நாடு, சிறியா, ஈருக், பலஸ்தீனம் என்னுமிவைகளெல்லாம் பிருத்தானியருடைய அதிகாரத்தில் தொடர்பாக இருக்கின்றன. பாரசீகமும் பிருத்தானியரின் ஆதிக்கத்தில்; இல்லையேல் அவர்களுடன் சிநேக நிலையில் இருக்குமானால், பிருத்தானியரும் ருஷியரும் சேர்ந்து ஜர்மனியரைக் கிழக்கே வரவிடாமல் தடுத்தல் முடியும்.

இது இங்ஙனமாக, பாரசீகம் இந்த யுத்த காலத்தில் இதுகாறும் பொதுநிலையை வகித்து வந்தது. ஆனால் ஜர்மனியர் பலர் அந்நாட்டிற் புகுந்து சஞ்சரிப்பாராயினர்; அதனைக் கண்ட பிருத்தானியர் ஜர்மனியரைப் பாரசீகத்தில் அதிகமாக ஊடாட விடுவது முறையல்லவென்று அந்நாட்டு அதிகாரிகளுக்குத் தெரிவித்தனர். அப்படியே ருஷியரும் தெரிவித்தனர். அதற்குப் பாரசீக நாட்டினர், தாங்கள் அங்குள்ள ஜர்மனியர் தொகையைக் குறைத்துவிடுவதாகவும், தம் நாட்டில் வந்து சஞ்சரிக்கும் அந்நியர்கள் விஷயத்தில் தாங்கள் கண்ணுங் கருத்துமாக இருப்பதாகவும் அவர்களால் எவ்வகையான பிழையும் வராமல் தாங்கள் சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்வதாகவும் உறுதிபண்ணிப் பிருத்தானியருக்கும் ருஷியருக்குந் தெரிவித்தனர். ஆனால், பாரசீகத்தார் சொன்ன சமாதானம் பிருத்தானியருக்கேனும் ருஷியருக்கேனும் திருப்தியைக் கொடுக்கவில்லை. இதனால் பிருத்தானியரும் ருஷியரும் சேர்ந்து தங்கள் பகைவராகிய ஜர்மனியர் பாரசீகத்துட்புகாதபடி தடுக்கவேண்டி ஏற்பட்டது. ஆயினும் பாரசீக நாட்டினருக்கும் தங்களுக்குமிடையே எவ்வகையான மாறுபாடுமில்லை யென்றும் அந்நாட்டினரைத் தாங்கள் பாதுகாத்துக் கொள்வதாகவும், ஜர்மனியரின் போக்கைத் தடுப்பதற்காகவே தாங்கள் யுத்தஞ் செய்யவேண்டியிருக்கின்றதென்றும், பாரசீகநாட்டிற்கு எவ்வகையான அழிவும் சுவதந்திரபங்கமுஞ் செய்வதில்லையென்றும் பிருத்தானிய ருஷியர் வற்புறுத்திக் கூறுகின்றனர். இப்படிப் பிருத்தானியரும் ருஷியரும் கூறிய சமாதானத்தைப் பாரசீக அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளவில்லையென்பது அந்நாட்டு மந்திரி சிலதினங்கட்கு முன் வெளியிட்ட பேச்சைக்கொண்டு அறியக்கிடக்கின்றது. இந்தச் சமயத்தில் பிருத்தானிய படை தரைமார்க்கமாகவுங் கடல் மார்க்கமாகவும் பாரசீகத்துட் புகலாயின; பாரசீகநாட்டினரும் ஆரம்பத்தில் அவர்களுடன் எதிர்த்துச் சமர்செய்தனரெனச் சொல்லப்படுகின்றது. எதுவிதத்திலும் பாரசீகத்தில் யுத்தம் மூளுமென்பது நிசம். ஆனால், இந்த விஷயத்தில் ஜர்மனியர் என்ன முயற்சி செய்வார்களென்பதையும் நாங்கள் விரைவில் அறியலாகும். இவைகளையெல்லாம் உத்தேசிக்குமிடத்தில் இன்னமும் இந்தக் கொடிய யுத்தம் பரந்து நீடித்துச் சனங்களுக்கெல்லாம் பொல்லா அநர்த்தங்களை விளைக்குமென்று நினைக்க வேண்டியிருக்கிறதேயொழிய இது இப்போதைக்கு ஒரு முடிவிற்கு வருமென எவரும் நினைக்க இடமில்லை யென்பது புலப்படுகின்றது.

## திருநெல்வேலி ஸ்ரீ நடேசன் காவிய கலாசாலை;

### பரீட்சைப் பேறுகள்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தாரால் நிகழும் ஆண்டில் நடத்தப்பெற்ற பால பண்டித பிரவேச பண்டித பரீட்சைகளில் மேற்படி கலாசாலையிலிருந்து பரீட்சையிற் பிரவேசஞ் செய்த மாணவருட் கீழே குறிக்கப் பட்டுள்ளோர் சித்தியடைந்தனர்.

பாலபண்டித பரீட்சை

1 வேலுப்பிள்ளை-முத்துலிங்கம்
2 சிவகுரு-ஆறுமுகம்
3 கந்தப்பு-இராசதுரை
4 பெரியதம்பி-தம்பித்துரை

பிரவேச பரீட்சை

1 அருணாசலம்—செல்வரத்தினம்
2 இராமலிங்கம் சதாசிவம்.

## இரதோற்சவம்

கோக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகப்பெருமான் கோவிலில் நேற்றுத்துவஜாரோகணமாகி மகோற்சவம் நடைபெறுகின்றது. வருகிற வியாழக்கிழமை (4-9-41) பகல் 1 மணி வரையில், புதிதாக அமைக்கப்பெற்ற அலங்கார ரதத்தில் சண்முகப் பெருமான் எழுந்தருளிக் காட்சி கொடுப்பார். இவ்வுற்சவம் கோக்குவில் மேற்கு திரு. ச. வே. சண்முகம்பிள்ளையவர்களின் உபயமாக நடப்பதென அறியலானோம்.

## நூற்குறிப்பு

**நவமணி** இது இலகுவான தமிழ் வசனநடையில் எழுதப்பட்ட ஒரு சனசமூக நாடகமாகும்; இந்த நாடகத்தின் நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணமும் கொழும்பு நகருமாகும். இதன்கண் உண்மைக்காதல், வஞ்சகரின் சூழ்ச்சி, போலிக்காதல், பொறுமை முதலிய பல விஷயங்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இதனை எழுதியவர் கொழும்பு வருமானவரி நிலையத்தில் உத்தியோகம் பார்க்கும் திரு. M. இராமலிங்கமவர்களாவர். இந்த நாடகம் பரிசளிப்பு முதலிய கொண்டாட்ட காலங்களிற் பள்ளிக்கூட மாணவர்களால் நடித்தற்கு வாய்ந்ததாகும். திரு. இராமலிங்கமவர்களின் முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றோம். இப்பிரதியைப் பெறவிரும்புவோர், "ஆரியநிலயம்" அலெக்சாண்டர்தெரு, வெள்ளவத்தை என்ற விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம். பிரதியின் விலை குறிக்கப்படவில்லை. எமக்கு உதவிய பிரதியை உவந்தேற்றோம்.

# உலகம்பலவிதக்கதை

### தானுகவந்த துணை

வண்டி வேகமாகச் சென்றபோது இராமனும் அதனைத் தொடர்ந்து வேகமாகச் சென்றான்; சிறிது தூரம் இராமனுடைய கண்ணுக்குப் புலப்பட்டபடி சென்ற வண்டி சந்தியில் அவனுடைய கண்ணுக்குப் புலப்படாது மறையவே இராமன் மனத்திற் சந்தேகமும் பின் அச்சமும் உண்டாயின; அவன் விரைவாய் நடப்பதை விட்டு ஓடத் தொடங்கினன்; சிறிது தூரம் ஓடிப்போய் இராமன் ஒரு நாற்சந்தி எதிர்ப்பட வண்டி எந்தப் பக்கத்தால் சென்றதென்றறியாமல் தியங்கினன். வண்டிச் சில்லின் சுவட்டை உற்றுப்பார்த்து அந்தச் சுவடுள்ள பாதையைத் தொடர்ந்து ஓடினன். ஓடிப்போன இராமன், சாமியம்மாள் கற்களை வீச, திருடர் மூவரும் கலைந்தோடிப் பக்கத்துப் புறம் சொல்லுக்குத் தோட்ட சமயத்திலே தான் அங்கே போய்ச் சேர்ந்தான். இராமனைக் கண்ட மாத்திரத்தே பிள்ளைகளிருவரும் சிறிது மனந்தேறினர்; "ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டு இராமன் தன் கம்பைச் சுழற்றியபடி காற்றிலும் வேகமாகத் திருடரைத் தொடர்ந்து சென்றான்; ஓடும் விஷயத்திலே திருடரை இராமன் வெல்ல முடியாதவனானன்; திருடர் இன்ன இடமென்றறியாத வண்ணங் குறுக்கே இறங்கி ஓட்டம் பிடித்தனர்; அன்றி அந்த வண்டியோடு மாடு நிற்றலை இராமன் கண்டு தான் பாய்ந்து வண்டியிலேறி அதனைத் திருப்பிக் கொண்டு வழியில் அயர்ச்சியோடிருந்த சாமியம்மாளையும் வண்டியில் ஏற்றிக் கொண்டு பிள்ளைகள் இருவரும் நிற்குமிடத்திற்கு வண்டியைச் செலுத்திக் கொண்டு வந்தான்; பிள்ளைகள் நின்ற இடத்திற்கும் வண்டி வருமிடத்திற்குமிடையே அரைப்பர் தூரம் வரையில் இருந்துஞ் சமயத்தில், ஒரு மோட்டாரதம், வண்டி வருந் திசைக்கு எதிர்பக்கமாகத் தெருவில் வழியே வந்து சகோதரிகளிருவரும் நிற்குமிடத்திலே தங்கியது. இரதம் நிற்கக் கண்ட மாத்திரத்தே பிள்ளைகளிருவரும் அச்சங் கொண்டு தெருவின் ஓரத்தில் ஒருபுறமாக ஒதுங்க, அந்த ரதத்தின் பின்னாசனத்தில் இருந்த, ஆங்கில உடை தரித்த ஒரு வாலிபன் "அம்மா, நீங்கள் பயப்படவேண்டாம்; நான் திருடனல்லேன்" என்று இதமாகச் சொல்லிக் கொண்டு மெதுவாக இரதத்தைவிட்டு இறங்கி வந்தான். சாரதி ரதத்திற்றானே இருந்தான். இறங்கி வந்த வாலிபனுடைய இதமான பேச்சையும் தண்ணளியோடு கூடிய முகத்தின் தோற்றத்தையும் தங்கள் முன் விநயத்தோடு நிற்கும் நிலையையும் பார்த்தவுடனே, கன்னியர் இருவரும் தாம் கொண்ட கலக்கம் நீங்கினர். "அம்மா! உங்களுக்கு வந்த ஆபத்தென்ன? இங்கே எப்படி வந்தீர்கள்? நீங்கள் யார்? உங்களைப் பார்த்தாற் பெரிய இடத்துப் பெண்கள் போற் காணப்படுகின்றீர்கள்" என்று அந்த வாலிபன் பரிவுடன் அவர்களை வினவினான். இதற்கிடையில் சாமியம்மாளும் இராமனும் அங்கு வந்து சேர்ந்தனர்.

### "இந்த நன்றியை மறக்க மாட்டோம்"

தயவுடன் வினவிய அந்த வாலிபனுக்கு சாமியம்மாளும் இராமனும் தாங்கள் அண்ணாமலைத் தலத்தை விட்டுப் புறப்பட்டு அங்கு வந்தவரைக்கும் நிகழ்ந்த வரலாறு முழுவதையும் சுருக்கமாகச் சொன்னார்கள்; கேட்ட அந்த வாலிபன் பெரிதுங் கவலைப்பட்டு, அவர்களைப் பார்த்து "இந்த இடம் பொல்லாத கள்ளர் சஞ்சரிக்கும் அந்தரமான இடம்; சிறு பெண்களையுங் கூட்டிக் கொண்டு நீங்கள் இருவரும் இங்கே வந்தது பெரும் பிழை; "சாரிது" பிரயாணஞ் செய்யும் நாங்கள் தானும் இந்த இடத்திலே தங்குவதில்லை; ஏதோ அந்த அண்ணாமலைத் தெய்வம் உங்களுக்கு, விசேஷமாக இந்தப் பெண்களுக்கு எவ்வகையான ஆபத்தும் அவமானமும் நேராமற் காத்துவிட்டது; சமயமும் பொழுது படுகின்றது; இனி நீங்கள் ஒரு நிமிஷமேனும் இங்கே தரிப்பது புத்தியல்ல; உந்த வண்டிக்காரனும் நல்லவன்; அவனுடைய வண்டியை நீங்கள் கொண்டு போவது புத்தியல்ல; கள்ளரை அகப்படுத்தி நியாயதலத்தில் ஒப்புவித்து அவர்களுக்குத் தக்க தண்டனை செய்விக்க என்னால் முடியும்; ஆனாலும் இந்த இரு பெண்களும் சம்பந்தப்பட்டிருப்பதனால் அவர்களை நியாயதலத்திற்கு இழுப்பது மரியாதையல்ல; போனது போகட்டும்; இனிமேலாயினும் பாதுகாப்பாக ரதத்தில் நான் ஏற்றிக்கொண்டு போகவேண்டும். வண்டியை உடம்படியே விடுங்கள்; நான் நடந்து வருகிறேன்; நீங்கள் இந்தக்காரில் ஏறிக்கொண்டு உங்களுடைய மடத்திற்குப் போங்கள்; போனவுடன் காரைத் திருப்பி அனுப்பி விடுங்கள்" என்று சாமியம்மாளுக்கும் இராமனுக்குஞ் சொல்லிவிட்டு, தன் சாரதியைப் பார்த்து, "கிருஷ்ணன், இவர்களைச் சாவதானமாகக் கொண்டுபோய்த் திருக்கோயில் மடத்தில் விட்டுவிட்டு, காரைக் கொண்டுவா" என்றான். "தம்பி, பெரிய உபகாரம். ஆனால் உம்மைத் தனியே இந்த இடத்தில் விட்டுவிட்டு, உமது காரில் நாங்கள் மாத்திரம் ஏறிக் கொண்டுபோவது சரியல்ல" என்று சாமியம்மாள் சொல்ல, இராமனும் "ஆம, ஐயா, நீங்களும் ஏறுங்கள், பொழுது பட்டுவிட்டது; நீங்களும் உடன் வந்தாற் சந்தோஷமாயிருக்கும்" என்றான்; இல்லை, "அதைப் பற்றிக் காரியமில்லை; கார் பத்து நிமிஷத்தில் போய்வந்துவிடும்; அதைப்பற்றி நீங்கள் யோசிக்கவேண்டாம்; பிள்ளைகள் வசதியாக ஏறிப் போகட்டும்; நான் நிற்கிறேன்; நீங்கள் காலதாமதம் பண்ணாமற் போய்க் காரை அனுப்புங்கள்" என்று மீட்டும் அந்த வாலிபன் சொன்னான்; "அப்படியானால், நானும் உங்களுடன் நிற்கிறேன்; சாரதி அம்மாளையும் பிள்ளைகளையும் கொண்டுபோய்மடத்தில் விட்டுவிட்டு வரட்டும்" என்று இராமன் சொன்னான்; "இல்லை, ராமு, நீரும் உடன் போவதுதான் பிள்ளைகளுக்கு விருப்பமாக இருக்கும்; சாரதி அவர்களுக்குப் புதியவன்; இப்பொழுது நாங்கள் பேசிக்கொண்டு நின்ற இவ்வளவு நேரத்திற்கிடையில் கார் போய் மீண்டு வந்திருக்கும்; ஆவதால் இராக்காலம் ஆகுமுன் அவர்கள் மடத்திற்குப் போய்ச்சேரவேண்டும்; கிருஷ்ணன் காரைத் திருப்பு, அம்மா, பிள்ளைகளை ஏறச் சொல்லுங்கள், நீங்களும் ஏறுங்கள், இராமு நீரும் ஏறும்" என்று அந்த வாலிபன் சொல்ல, அமிர்தாம்பிகை "ஆச்சி, இராமண்ணையையும் அவர்களுடன் நிற்கச்சொல்லுங்கள்" என்று மெல்லச் சொன்னாள்; அதனைக் கேட்ட சாமியம்மாள் இராமனுக்கு அப்படியே சொல்ல, இராமன் "ஆம், அப்படியே நிற்கிறேன்" என்றான்; வாலிபனும் பிள்ளைகளுக்கு இராமன் தன்னுடன் நிற்பது பிரியந்தானென்று கண்டவுடன், தடுத்தொன்றுஞ் சொல்லாதொழிந்தான்; பிள்ளைகளிருவரும் ஏககாலத்தில் அந்த வாலிபனுக்கு நமஸ்காரம் செய்து "ஐயா, நீங்கள் செய்த நன்றியை நாங்கள் ஒருபோதும் மறக்க மாட்டோம்; நாங்கள் போய்ச் சீக்கிரம் காரை அனுப்பிவிடுவோம்" என்று ஒதுங்கி நின்று பணிவுடன் சொன்னார்கள். "நான் ஒரு நன்றியுஞ் செய்யவில்லையே; என் கடமையைத் தானே செய்தேன்; உங்களுக்கு இந்த நேரத்தில் என்னால் இயன்ற உதவி செய்யச் சமயங் கிடைத்ததே யென்றதையிட்டுத்தான் தெய்வத்தைப் பாராட்டுகின்றேன்; சுகமே போய்வாருங்கள்" என்று அந்த வாலிபன் விநயத்துடன் சொல்லிப் பிரதி நமஸ்காரஞ் செய்தான்; சாமியம்மாளும் அப்படியே நன்றி கூறினாள்; மூவரும் காரில் ஏறிப் பின்னாசனத்தில் இருந்தனர். இரதம் புறப்பட்டது, புறப்படும்போதும் கன்னியர் இருவரும் அந்த வாலிபனைப் பார்த்து நமஸ்காரம் பண்ண அவனும் பிரதி நமஸ்காரம் செய்தான்.

### "நானும் அப்படியே நினைத்தேன்"

ரதம் வேகமாகப் போகும்போது சுந்தராம்பிகை தன் தமக்கையைப் பார்த்து "அக்கா, நாங்கள் இப்பொழுது செய்தது பெரும் பிழையல்லவா, அவரை நிற்கவிட்டு, அவருடைய ரதத்தில் நாங்கள் ஏறிக்கொண்டு வருகிறோமே, அவரை இராமண்ணையோடு முன்னாசனத்தில் இருக்கச் சொல்லேனுமில்லையே; நான் அப்படிச் சொல்ல நினைத்தேன்; ஆச்சிக்குச் சம்மதமாயிருக்குமோ, உங்களுக்குப் பிரியமாயிருக்குமோ அல்லவோ என்ற சந்தேகத்தினால்தான் சொல்லாமல் விட்டேன்; அதை நினைக்க எனக்கு மனவருத்தமாகஇருக்கிறது" என்று மெல்லச் சொன்னாள்; "தங்கே, நானும் அப்படித்தான் எண்ணினேன்; ஆனால் ஆச்சியின் கருத்து என்னவென்று அறியாமையினால், நான் அவரைக் கேட்கத் துணியவில்லை" என்று அமிர்தாம்பிகை சொன்னாள்; இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த சாமியம்மாள் "ஐயோ, நான் அந்தப் பிள்ளையையும் காரில் ஏறிக்கொண்டுவரச் சொல்ல யோசித்துவிட்டு, பின்னும், உங்களுக்கு அது உடன்பாடாயிருக்குமோ என்பதை யறியாமற்றான் அவரைக் கேளாமல் விட்டேன்; அந்தப் பிள்ளை அருமையான பிள்ளைபோற் காணப்படுகிறது" என்று சொல்ல, சுந்தராம்பிகை "ஆச்சி, நாங்கள் மூன்றுபேருங் கெட்டிக்காரர்தான்; போனது போகட்டும், இனிச் செய்வதென்ன" என்று கேட்க, சாமியம்மாள் "இனி யென்ன செய்யலாம்; ஒன்றுஞ் செய்யமுடியாது; ஆனால் நான் ஒன்றை அவதானித்தேன்; அந்தப் பிள்ளை இந்த வடதேசத்தவரல்லர்; அவர் பேசும் பேச்சு எங்களூர்ப் பேச்சாக இருக்கிறது; எங்களூரிலே தான் அவர் ஒரு பெரிய வீட்டுப் பிள்ளையாக இருக்கக்கூடுமென்று நினைக்கிறேன்" எனலும் அமிர்தாம்பிகை "நானும் அப்படித்தான் எண்ணுகிறேன், ஆச்சி" என்றாள். "மக்காள், அப்படியிருப்பதால், நாங்கள் இப்பொழுது அவரை இங்கே கூப்பிட்டு இயன்றவரையில் உபசரித்து அனுப்புவதுதான் முறை; அது உங்களுக்குச் சம்மதமா" என்று சாமியம்மாள் கேட்க, "ஆச்சி, எங்களுக்கு அம்முறையுஞ் சம்மதம்; செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்வானகமுமாற்றலரிது என்று சொல்லுவார்களே" என மகிழ்ச்சியோடு கூறினாள் சுந்தராம்பிகை. 'ஆச்சி, அவரை இந்தக் காரிலேதானே இராமண்ணையுடன் கூடிக்கொண்டுஅவரை வரும்படி இந்தச் சாரதியிடம் சொல்லிவிடுங்கள்' என்று பரிவுடன் சொன்னாள் அமிர்தாம்பிகை. "மக்காள், அந்தப் பிள்ளை இங்கே வந்தால் நாங்கள் என்ன கொண்டு உபசரிக்க இயலும்? நாங்கள்தான் ஆண்டி பரதேசிகளின் நிலையிலானோமே" என்று சாமியம்மாள் கவலையுடன் சொல்ல, சுந்தராம்பிகை "ஆச்சி, கவலைப்படாதீர்கள்; மனமுண்டானால் இடமுண்டு, பனையளவு அவாவிருக்குந் தினையளவு புஷ்பம், என்று எங்கள் ஊரிற் சொல்லுவார்கள்; எங்களுக்குத்தான் இப்பொழுது என்ன குறை வந்தது? மடத்திற் கடுக்கப் பிராமணர் கடையிருக்கிறது, இராமண்ணையைக் கொண்டு உயர்ம பட்சணம் வாங்குவித்து இயன்றவரையில் உபசரிக்கலாம்" என்று உபாயஞ் சொன்னாள். "அது வெல்லாம் பார்த்துக் கொள்ளுவோம் ஆச்சி, நீங்கள் அவரை வரும்படி சாரதியிடஞ் சொல்லிவிடுங்கள்" என அமிர்தமுஞ் சொல்ல, "பிழை சொல்லுவன்னை நாளை காதில் ஏறுமா, நான் சொல்லியனுப்பினால் அந்தப் பிள்ளை வரப்போகுமா? நீங்கள் தான் சொல்லிவிடுங்கள்" என்று சாமியம்மாள் புன்சிரிப்புடன் கூறினாள்; "என்ன ஆச்சி, பரிகாசஞ் செய்கிறீர்கள், எங்களுக்கு அப்படிச் சொல்ல வெட்கமாயிருக்கிறது; வேணுமானால் நாங்கள் வரச் சொன்னதென்று நீங்கள் சொல்லி விடுங்கள்" என்று சுந்தராம்பிகை சொன்னாள்; இதற்கிடையில் "இதுதான் நாங்கள் இருக்கும் மடம்" என்று சாமியம்மாள் சொல்ல அந்தமடத்தின் வாசலில் கிருஷ்ணன் ரதத்தை நிறுத்தினான்.

### "உங்களைத் தயவு செய்து வரச் சொன்னார்கள்"

மூவரும் ரதத்தை விட்டு இறங்கினார்கள்; இறங்கும்போது சாமியம்மாள் கிருஷ்ணனைப் பார்த்து "தம்பி, உங்கள் ஐயாவைத் தயவு செய்து இங்கே வந்து போகும்படி இந்தப் பிள்ளைகள் சொன்னார்களென்று அவருக்கு நீ மறந்து போகாமற் சொல்லிவிடு" என்று சொல்ல, "ஆம், ஆச்சி அப்படியே சொல்லி விடுகிறேன்" என்று கிருஷ்ணன் சொல்லிக்கொண்டு ரதத்தைத் திருப்பினன். "கிருஷ்ணன், எப்படியேனும் அவரை அழைத்து வரும்படி ராமண்ணையிடமுஞ் சொல்லு" என்று சுந்தராம்பிகை ஆவலுடன் சொல்ல, சாரதி "ஆம், அம்மா, சொல்லுகிறேன்" என்றுகூறி ரதத்தை வேகமாகச் செலுத்திச் சென்றான். சிறிது தூரம் ரதம் ஓட, இராமனுடன் நடந்து வந்த வாலிபன் தன் ரதம் எதிரில் வருவதைக் கண்டு ஒதுங்கி நின்று ரதத்தை நிறுத்தும்படி சாரதிக்குக் கை காட்ட அவன் ரதத்தை நிறுத்தினான். "ஐயா, நீங்கள் காரில் ஏறிச் சுகமே போய்வாருங்கள்; நீங்கள் செய்த உதவியை நானும் பிள்ளைகளும் அம்மாளும் ஒருபோதும் மறக்கமாட்டோம்; பட்டினம் கிட்டிவிட்டது, நான் சில நிமிஷத்தில நடந்து மடத்திற்குப் போய் விடுவேன்" என்று இராமன் வணக்கத்துடன் சொன்னான். இதற்கிடையில் கிருஷ்ணன் "ஐயா, உங்களைத் தயவு செய்து தங்கள் மடத்திற்கு இப்பொழுது வந்து போகும்படி உங்களுக்குச் சொல்லச் சொன்னார்கள்" என அவனுக்குச் சொன்னான். "ஆரை, கிருஷ்ணன், என்னையா? ஆர் அப்படிச்சொன்னார்கள்" என்று வாலிபன் கேட்க, "அந்தப் பெரியம

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## திருட்டுப் பொருள் வைத்திருந்த குற்றம்

### எதிரிக்கு ரூபா 25 அபராதம்

(சமது நிருபர்)

கரையூரில் வசிக்கும் M. J. கல்லையாவின் களவுபோன ரூபா 40 பெறுமதியான பெற்றோமாக்ஸ் லாம்பை வட்டுக்கோட்டையில் வசிக்கும் மாரிமுத்து பொன்னம்பலம் வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர். குவிண்டன் பேர்னண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப் பட்டு விசாரணையின் பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு ரூபா 25 அபராதம் விதித்தார்.

## ஆயுதங்களைத் திருடியவருக்கு வாரண்ட்

சோனகதெருவில் வசிக்கும் கன்னா வேலை செய்யும் அபூசுனிபாவின் ரூபா 117 பெறுமதியான கன்னாவேலை செய்யும் ஆயுதங்களைக் கொண்டு சென்றதாக தவ்லூர் M. M. கச்சமுகமது மீதும் A. C. மீரா முகமட்லெவ்வை மீதும் குற்றஞ் சாட்டி ஒரு வழக்கை நீதிபதி மிஸ்டர். குவிண்டன் பேர்னண்டோ முன்னிலையில் தொடர்ந்தார். அப்போது அபூசனிபா கூறியதாவது:-

கன்னாவேலை செய்வதற்காக நான் கிராமங்களுக்குச் செல்வதுண்டு. மேற்கூறிய எதிரிகளிருவரும் எனக்குக் கீழ் நின்று வேலை செய்யும் கூலியாட்கள். சென்ற 21-ந்திகதி கன்னாவேலை செய்யும் சாமான்களை பஸ்ஸுக்கு ஏற்றிச் செல்லுவதற்காக ஒரு றிக்ஷோ பிடித்துவரும்படி அவர்களிடம் கூறினேன். சாமான்களை பஸ்ஸிற் போட்டு நெல்லியடிக்குக் கொண்டுபோக இருந்தேன். அவர்கள் ஒரு றிக்ஷோவைக் கொண்டுவந்து அதிற் சாமான்களை ஏற்றி பஸ்நிலையத்திற்குக் கொண்டு சென்றார்கள் நான் வீட்டிற் சிறிது நேரம் தாமதித்துத் தேநீர் அருந்திவிட்டுப் பஸ் நிலையஞ் சென்று பார்த்தபோது சாமான்களும் எதிரிகளும் காணப்படவில்லை. நான் அவர்களைத் தேடினேன். பின்னர் இச்சம்பவத்தை விதானையாருக்கு அறிவித்தேன். நான் விசாரித்த போது கொடிகாமத்தில் வசிக்கும் முகதீன்கண்டு வீட்டில் எதிரிகளிருவரும் அடுத்த நாள் நின்றதாயும் சாமான்களை வைத்திருந்ததாயும் அறிந்தேன்.

நீதிபதி எதிரிகளிருவருக்கும் வருகிற 9-9-41 க்கு வாரண்டு விட்டு வழக்கை மேல் விசாரணைக்குத் தவணையிட்டார்.

## கொக்குவிற் கத்திக்குத்து வழக்கு

### எதிரிக்கு அபராதமும் நன்னடத்தையும்

உன்போன்ற வாலிபர்கள் கத்தியைக் கையாளும் தொடர்கூடாது உன்னைநாலுமாதம் சிறைக்கு அனுப்பியிருப்பேன். ஆனால் உனக்காக ஏற்பட்ட நியாயதுரந்தரர் உன்னுடைய இளம்வயதையும் நன்னடத்தையையும் எடுத்துக்காட்டினமையாலும் இதுதான் முதல்குற்றமாகையாலும் உனக்கு ரூபா 60 அபராதமும் 100 ரூபாவில் ஆறுமாதத்திற்கு நன்னடத்தைப்பிணையும் விதிக்கிறேன் என்று கொக்குவிலில் வசிக்கும் செல்லப்பா-இரத்தினசிங்கம் என்பவர் ஆவ்லூர் வேலாயுதர் ஐயாத்துரைஎன்பவருக்குக்கத்தியால் குத்திக்காயமுண்டாக்கியதாகக் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர் குவிண்டன் பேர்னண்டோ முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி தீர்ப்புக் கொடுத்தார். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தார்.

## களவு மாட்டை வைத்திருந்தோனுக்கு 25 ரூபா அபராதம்

கைதடியில் வசிக்கும் பசுபதி-கந்தையா நாவற்குளியில் வசிக்கும் சின்னப்பு-பொன்னம்பலத்தின் களவுபோன மாடொன்றை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம்நீதிபதி மிஸ்டர். குவிண்டன் பேர்னண்டோ முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகுற்றத்தை ஒப்புக்கொண்டான். நீதிபதி ரூபா 25 அபராதம் விதித்தார்.

## ஆனைக்கோட்டையிற் பொல்லடியா?

ஆனைக்கோட்டையில் வசிக்கும் சின்னத்தம்பி-வயித்திலிங்கம் அவ்வூர் வீரவாகு-நாகலிங்கத்திற்குப் பொல்லாலடித்துப் பலகாயம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டி ஒரு வழக்கு யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர் குவிண்டன் பேர்னண்டோ முன்னிலையில் தொடரப்பட்டபோது பொன்னம்பலம் கைம்பெண் காகரெத்தினம் கூறியதாவது:-

இச்சம்பவத்தன்று இரவு நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது வீரவாகு-நாகலிங்கம் ஒழுங்கையால் பாலையோ வைது கொண்டு வந்தார். அப்போது வைத்திலிங்கம் யாரையடா வைகிறாய் என்று கேட்டார். அவர் உன்னைத் தான் என்று சொன்னார். ஆகவே, இருவரும் வாக்குவாதப்பட்டனர். பின் அடி விழுந்து சத்தம் கேட்டது. நான் சாப்பாட்டை விட்டுப்போட்டு வெளியடிக்கு ஓடிச் சென்று பார்த்தேன். அப்போது எதிரி நாகலிங்கத்திற்குப் பொல்லுப் போன்ற ஆயுதமொன்றால் 4 அல்லது 5 முறை அடித்தார். நாகலிங்கம் நிலத்தில் விழுந்து விட்டார், எதிரி அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டார். பின்னர் காயக்காரன் பொன்னையா வீட்டுப் படலையிலிருந்து கூப்பிட்ட சத்தம் கேட்டது. மறுநாட்காலையும் காயக்காரன் ஒழுங்கையிலேயே இருந்தான். பொலிசார் வந்து காயக்காரனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். நீதிபதி எதிரியை 200 ரூபாப் பிணையில் விட்டு வழக்கை மேல் விசாரணைக்கு வருகிற 17-9-41 க்குத் தவணையிட்டார்.

## பெண்ணைக் குத்திக் கொன்றானும்

### சாவகச்சேரியில் நடந்த சம்பவம்

சாவகச்சேரியில்வசிக்கும் S. இராசையா அவ்வூர் சிவலிங்கம் பெண் இரத்தினத்தைக் கத்தியால் குத்திக் கொலைசெய்ததாக அறிகிறோம்.

இரத்தினம் கணவன் சிவலிங்கத்தோடு பகைத்துக் கொண்டு சிலகாலமாகப் பிரிந்து இருந்ததாகவும் சிவலிங்கத்தின் பிள்ளைகட்கு S. இராசையா பாடஞ் சொல்லிக் கொடுத்து வந்ததாகவும் இப்படி நடைபெற்று வந்த காலத்தில் இரத்தினமும் இராசையாவும் நட்புக் கொண்டிருந்ததாகவும் பின்னர் இரத்தினம் வவுனியாவிலுள்ள ஆஸ்பத்திரிக்கு நோயாளரைப் பராமரிப்பதற்காகச் சென்றிருந்ததாயும் இதனை விரும்பாத S. இராசையா சாவகச்சேரிக் கோட்டில ஒருவழக்கை இரத்தினத்திற்கு மாறாகத் தொடர்ந்ததாயும்இவ்வழக்கிற்கு இரத்தினம் கோட்டிற்கு வந்தபோது நீதிபதி இருசாரிபாரையும் எச்சரிக்கை செய்து அனுப்பியதாயும் பின்னர் இச்சம்பவத்தன்று இரத்தினம் கிராமச்சங்கத் தெரிவுக்குத் தமது சம்மதத்துண்டைப் போடச் சென்று வீடு திரும்பி வருகையில் ஓர் ஒழுங்கை நடுவில் எதிரி ஒருவிரித்த கத்தியோடு எதிர்த்தபோது, இரத்தினம் அவரைக் கண்டதும், சிரித்ததாகவும் இதற்கிடையில் அவர் அவளுடைய மார்பிற் குத்திவிட்டதாகவும் தெரிகிறது. அவள் உடனே விழுந்து இறந்து விட்டாள். சாவகச்சேரிப் பொலிசாருக்கு இச்சம்பவம் அறிவிக்கப்பட்டது. நீதிபதி விசாரணையை நடத்தியபோது, பொலிசார் எதிரியைப் பிடித்து வந்து அவர் முன்னிலையில் நிறுத்தினர். எதிரி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார். அவள் இறக்கும் போது சிரித்துக்கொண்டே இறந்தாளாம்.

## அடுத்த வைஸ்ராய் யார்!

### ஸேர். ஜோன் ஆண்டர்ஸனின் பெயர் பிரஸ்தாபம்

கல்கத்தா, ஆக 22

"அமிர்தபஜார்" பத்திரிகைக்கு லண்டனிலிருந்து வந்த ஒரு செய்தியில் அங்குள்ள "டெய்லி டிஸ்பாச்" என்ற பத்திரிகை ஸேர். ஜோன் ஆண்டேர்ஸனுக்கு இந்திய வைஸ்ராய் பதவியை அளிக்க வேண்டுமென எழுதியிருப்பதாகக்குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## ஆடிமாதச் சுப்பிறீங்கோடு

யாழ்ப்பாணம் ஆடிமாதச்சுப்பிறீங்கோடு வருகிற ஒக்டோபர் ௴ 6-ந் திகதி தொடங்குமென அறிகிறோம். முதல் செப்டம்பர் மாதத்தில்தொடங்குமென அறிவிக்கப்பட்டது. பின்னர் அதனைமாற்றி அறிவிக்கப் பட்டதெனவறிகிறோம். மேலும் இம்முறைக்கு பத்துவழக்குகள்வரை விசாரணைக் கிருப்பதாகவுமறிகிறோம். ஙு. கி

## மற்றொரு ஜப்பான் கப்பல் வருகை

### ஏராளமான சரக்குகள் இறக்குமதி

"டோயூகாமாரு" என்னும் ஜப்பானிய கப்பல் சென்ற திங்கட்கிழமை சிங்கப்பூரிலிருந்து 450 தொன் சர்க்கரையோடு இங்கு வந்து சேர்ந்திருக்கிறது.

இதைத் தவிரப் பஞ்சு பட்டுச் சாமான்கள் தேயிலைப் பெட்டிகள் சில்லறை ஜவுளிகள் முதலியவைகளடங்கிய 1300 தொன் சரக்குகள் அக்கப்பலிலிருந்து இறக்குமதியாயின.

"டோயூகாமாரு ஹகோனிமாரு" ஆகிய இரண்டு கப்பல்களிலிருந்து இறக்குமதியான சாமான்களின் விஷயம் சம்பந்தமாக ஜப்பானிய ஸ்தானிகர் திரு. ஐ. ஷி. பாடாகிற்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையே பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

இவ்விஷயம் விரைவில் சமாசமான முடிவுக்கு வந்துவிடும் என்று ஜப்பானிய ஸ்தானிகர் ஒரு பத்திரிகை நிருபரிடம் தெரிவித்தார்.

## இலங்கை இந்தியர் காங்கிரஸ் யாழ்ப்பாணம்

இச்சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று நிகழும் செப்டம்பர் ௴ 1-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில் யாழ்ப்பாணம் பெரியகடை பிள்ளையார்கோவிலருகிலிருக்கும் பாரதி பாஷ்ய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அத்தருணம் இந்திய அரசாங்கத்திற்கும் பர்மா அரசாங்கத்துக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தைக் கண்டித்தும் சமீபத்தில் நடைபெறவிருக்கும் இந்திய இலங்கை குடியேற்றப் பேச்சுகளையொட்டியும் சிலதீர்மானங்கள் நிறைவேற்றப் படும் என அறிகிறோம்.


### விளம்பரம்

'கோட்டாப்பயிர்கள்'

யாழ்ப்பாணக் குடாநாட்டிற் பயிரிடப்படும் 'கோட்டாப்'பயிர்கள் (அஃதாவது வெங்காயம் மிளகாய் முதலியன) கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மூலமாக மாத்திரமே மார்க்கெட்டிங் பகுதியாரால் 1941-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ந் திகதிதொடக்கம் அங்கீகரிக்கப்படும்.

B. H. பசெற்
மார்க்கெட்டிங் கொம்மிஷனர்

Mis 93—28.8-41


## தருமபுரம் ஆதீனம் மெய்கண்டான் சித்தாந்த மகாநாடும் ஆவணி மூலத் திருமுறைத் திருநாளும்

1941 ஆகஸ்ட் 28, 29, 30, 31, (4-நாட்கள்) தருமபுரத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சி முறை

28-8-41 சமயாசாரியார் நால்வர் வழிபாடு.

29-8-41 மகாநாடு 'சிவஞான போதம்' முதல் ஆறு சூத்திரக் கட்டுரைகள் பேசுதலும் படித்தலும்.

30-8-41 மகாநாடு 'சிவஞானபோதம்' பின்ஆறு சூத்திரக் கட்டுரைகள் பேசுதலும் படித்தலும்.

31-8-41 ஆவணிமூலத் திருமுறை நாள் இரவு திருமுறை ஊர்வலம்.

தலைவர்கள்-: சைவத் திருவாளர்கள், காசிவாசி, சிவஸ்ரீ ஈசான சிவச்சாரியார் அவர்கள், H. R. E. போர்டு கொம்மிஷனர், இராவ் பகதூர், C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B. A. B. L.

கோவை, சிவக்கவிமணி,

C. K. சுப்பிரமணிய முதலியார் B. A.

பலதமிழ், இசைப் புலவர்கள் சொற்பொழிவும், திருமுறைப் பாராயணமும் நடத்துவார்கள்.

---

பாடப்புத்தக விசாரணை

# 'அதிகாரிகள் கைலஞ்சம் வாங்குகின்றனர்'

## விசாரணைக் குழுவின்முன் நூலாசிரியர் சாக்ஷியம்

### ஆதாரமாகக் கடிதங்களின் புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்பட்டன

சென்ற திங்கட்கிழமை காலை பாடப் புத்தக விசாரணைக் குழுவினரால் விசாரணை நடத்தப்பெற்றபோது மிஸ்டர். ஆனந்தராஜகருணாஎன்பவர் சாக்ஷியங் கொடுத்தார். அவர் தம்மை ஓர் ஆசிரியரெனச் சொல்லிக் கொண்டார்.

சென்ற 15 வருஷங்களாக 40 பாடப் புத்தகங்களை எழுதியிருப்பதாயும் அவையனைத்தும் செய்யுட் புத்தகங்களென்றும் இக்கரில் சிங்களப் பாடப்புத்தகங்களைப் பிரசுரிக்கும் சில பிரபல பதிப்பாசிரியர்களுக்காகத் தொடரான சில புத்தகங்களைத் தாம் எழுதியதாகவும் அவர் தெரிவித்தார். சென்ற 5 வருஷங்களாகத் தம் சிங்கள நூலாசிரியர் சங்கத் தலைவராக இருந்ததாயும் அவர் தெரிவித்தார்.

### ஹிட்லர் சரித்திரத்தை எழுதியவர்

"அடோல்ப் ஹிட்லரின்வாழ்க்கை வரலாறு" என்னும் நூலையும் அண்மையில் தாம் சிங்களமொழியில் எழுதி முடித்ததாகவும், அந்நூலை மெச்சிய செய்தி உத்தியோகஸ்தர் அதற்கொரு முகவுரையை வழங்கியதாகவும் அவர் கூறினர்.

நூலாசிரியர்களிடையே ஏற்பட்ட மனஸ்தாபத்தின் பலனாகப் பாடப் புத்தகம் பற்றிய கிளர்ச்சி ஏற்பட்டதென்பதை அவர் மறுத்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

பிரசித்திபெற்ற சிங்களக் கவிகள் எழுதிய சில நூல்களிலிருந்து சில பகுதிகளைச் சிலர் திருடி எடுத்துப் பிரசுரித்திருக்கின்றனரென்றும் அப்படிப்பட்ட புத்தகங்களைச் சிங்களப் பாடப் புத்தக நிர்வாகசபை அங்கீகரித்தமை ஆச்சரியமான விஷயம் என்றும் மிஸ்டர் ஆனந்த ராஜக்கருணா கூறினர்.

வித்தியாபகுதி அதிகாரிகளிடமும் பாடப்புத்தக நிர்வாகசபை அங்கத்தவரிடமும் கைலஞ்சம் வாங்கும் வழக்கமும் மற்றும் ஊழல்களும் இருந்து வருவதென்பதை மேற்கூறிய விஷயங்கள் நிச்சயப்படுத்துகின்றன என்று அவர் குறிப்பிட்டுத் தாம் சாக்ஷியங் கூறுவதைத் தடுப்பதற்கு வித்தியாபகுதி உத்தியோகஸ்தரிற் சிலர் முயன்றனரென்று தெரிவித்தார்.

வித்தியாபகுதி உத்தியோகஸ்தர் சிலர் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று கூறியதை நிச்சயப்படுத்துவதற் காதாரமான கடிதங்களின் புகைப்படங்களை அவர் சமர்ப்பித்தார்.

பாடப்புத்தகங்களை எழுதிய சிலசிங்கள ஆசிரியர் மீதும் அவர் குறைகள் சுமத்திப் புத்தகங்களைப் பதிப்பிக்கும் சமுதாயங்கள் ஆசிரியரைச் சுரண்டிய விதத்தையும் ஆசிரியரும் பதிப்பாசிரியரும் பொதுஜனங்களை அடிக்கடி ஏமாற்றிய விதத்தையும் தெரிவித்தார்.

பாடப்புத்தக விசாரணைக் குழுவின் நியமனத்தை ஆக்ஷேபித்து ஒருசிலர் அறிக்கை யொன்றை யனுப்பியதற்கு வித்தியாபகுதி உத்தியோகஸ்தர் சிலரும் உடந்தையாயிருந்தனரென்று அவர் அறிவித்தார். பின்னர் வித்தியாகர்த்தரால் எழுதப்பட்ட பூமிசாஸ்திரப் பாடப் புத்தகங்களைப்பற்றி மிஸ்டர். ராஜக்கருணா குறிப்பிடும்போது 3-ம் வகுப்பு மாணவனொருவன் வருடமொன்றுக்கு 3 பாடப்புத்தகங்களை வாங்கவேண்டியிருந்ததென்றும், இந்நாட்டில் உபயோகிக்கப்படும் பூமிசாஸ்திரப் புத்தகங்களில் மிகச் சிறந்தவை வித்தியாகர்த்தரின் புத்தகங்களே என்றும் கூறினர்.

கைலஞ்சம் வாங்கும் வழக்கமும் ஊழல்களும் வித்தியாபகுதி உத்தியோகஸ்தரிடமிருந்து வருவதாகச் சமீபத்தில் அரசாங்கசபை அங்கத்தவர் பகிரங்கமாகக் கூறியிருப்பதாயும் அவர் சொன்னர்.

சில பாடசாலைகளுக்குச் செட்டபெயர் ஏற்படுவதாயும், சில அரசாங்கசபை அங்கத்தவர்கள் தென்பகுதியைச் சேர்ந்த சில பாடசாலைகளில் தங்கள் வாரத்தைக் கழித்து வருவதாயும் அவர் தெரிவித்தார்.

மற்றுஞ் சாட்சியம் இரகசியமாகக் கூறப்பட்டது.

# இலங்கை இந்தியரின் அந்தஸ்து

### வரும் பேச்சுக்களிற் பிரதான இடம் பெறும்

சிம்லா, ஆக, 25—

இலங்கை-இந்தியச் சமரசப்பேச்சுக்கள் மீளவும் ஆரம்பிக்கப்படும்போது வியாபாரப் பேச்சுக்கள் எடுத்துக்கொள்ளப்படமாட்டா தென்று கூறப்படுகிறது.

அண்மையில் நடைபெறவிருக்கும் பேச்சுக்களில் குடியேறற்ப் பிரச்னையும் இலங்கைவாழ் இந்தியரின் அந்தஸ்துப் பிரச்னையுமே பிரதானமானதாகக் கவனிக்கப்படுமென ஊகிக்கப்படுகிறது.

ஏற்கனவே டில்லியில் நடைபெற்ற பேச்சுக்களில் இலங்கைவாழ் இந்தியரின் அந்தஸ்துப்பற்றிய கேள்வி எழுந்தவுடன் அவை குழப்பிவிட்டன.

ஆயின், இந்திய அரசாங்கம் சென்ற நவம்பர் மாதத்திற பேச்சுக்கள் குழம்பி விட்டதைப்பற்றி அறிவிக்கும்பொழுது பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது:—

சிநேக பான்மையையும் ஒத்துழைப்பையும் அடிப்படையாகக் கொண்டே இரு தேசங்களின் உறவு விளங்கவேண்டுமென்ற நாங்களுடைய எண்ணம் எவ்விதத்திலும் குறையவில்லை. வெற்றிகரமாக முடிவதற்குச் சாத்தமான மார்க்கங்களுடன் பேச்சுக்களை திருப்பவும், ஆரம்பிக்கக் கூடியவிரைவில் வழி ஏற்பட்டால் நாங்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ள ஆயத்தம்.


# தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.

"புரேப்ரைட்டர்"

Y 19. 4.3.41—3.3.42 K. A. இரத்தினசிங்கம்


பில்லாவிடத்து வருணச்சிரம தருமங்கள் தழைத்தோங்கா.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனு மது."

என்றதற்கு அன்பில்லா விடத்து இல்வாழ்க்கை பயனற்றதாகும். மிகவும் சிறந்த தருமமாகிய விருந்தினரை உபசரித்தலுக்கும் அன்பு வேண்டும். அன்பிலாதவர்கள் இடும் உணவு வேம்புக்குச் சமானமாம். இதனை,

விருப்பிலா ரில்லத்து வேறிருந் துண்ணும்
வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாம்—விருப்புடைத்
தன்போல்வா ரில்லுட் டயங்குநீர்த் தண்புற்கை
யென்போ டியைந்த வமிழ்து.

என்னும் நாலடியார்ச் செய்யுளாலுமுணரலாம்.

மேலும், "சைவம்" என்னும் சொல் தற்போது கொல்லாமையையும் புலாலுண்ணாமையையுங் குறித்து நிற்கின்றதன்றோ! அன்புடையானொருவன் தனது ஊனைப் பெருக்குவதற்கு ஒருபோதும் உயிர்க்கொலை செய்ய மனம் ஒருப்படான். பிறரை வருத்தவும் துணியான். தவவொழுக்கத்துக்கும் விரதானுஷ்டானங்களுக்கும் அன்பு அவசியம் வேண்டும். "தான் பெற்றது கொன்று தின்னுமை" என்று ஔவையார் அருளியவாறும் "படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன் உடல்சுவை யுண்டார் மனம்" என்று திருவள்ளுவர் கூறியவாறும் காண்க. தவத்துக்குக் கொல்லாமையே மேலானதவம்.

இதுகாறும் கூறிப் போந்தவற்றால் அன்பே சிவத்துடன் இரண்டற அபேதமாய் நிற்குமென்பதும், அது நமது பூர்வ புண்ணியங்களினாலே ஆன்மாக்களாகிய நமக்குக் கிட்டுமென்பதும், தவம் யாகம் முதலியவற்றிற்கு வசப்படாத சிவபெருமான் அன்பின் வசப்படுவரெனபதும், பசுக்களாகிய நாம் நமது மலத்தை நீக்குதற்கு அவர் மீது பக்தியுடையவர்களா யிருத்தல் வேண்டுமென்பதும், அன்புடைமைக்கு அடையாளங்களிவையென்பதும், அன்பு இத்தனை வகைப்படுமென்பதும், சைவசமயத்துக்கு அன்பு இன்றியமையாததென்பதும், வேதசிவாகமங்களிலே கூறப்பட்ட சிவபுண்ணியங்களைச் செய்தற்கு அன்பு அடிப்படையாக உள்ளதென்பதும், தீவிரதரமாகிய அன்பின் முதிர்ச்சியிலேயே ஆன்மநாயகராகிய சிவபெருமான் விளங்குவரென்பதும் பெறப்பட்டன. ஆதலின், சைவசமயிகளாகிய நாங்கள் வேதவழிநின்று, சிவபெருமானிடத்து உறுதியான அன்புபூண்டு, அவரது திருவடித் தாமரைகளை அடைய முயலுவோமாக.

சைவசாஸ்திர பரிபாலனம்.

# இலங்கை - இந்தியச் சம்பாஷணை

## இந்தியக் கோஷ்டி அங்கத்தவரின் விபரம்

### இரு அரசாங்கங்களின் அறிக்கை

### வர்த்தகப் பேச்சு இப்போதில்லை

இலங்கை இந்திய சம்பாஷணை மீளவும் அடுத்தமாத ஆரம்பத்தில் நடைபெறுமென்று இலங்கை அரசாங்க உத்தியோகமுறையில் அறிவிக்கின்றனர். ஆயின், வர்த்தகப் பேச்சுக்களை நடத்துவதற்கு இந்திய அரசாங்கம் தயாராக இல்லாததால் அவ்விஷயம் பின்னுல் கவனிக்கப்படுமென்று இவ்வறிக்கையிற் கூறப்பட்டிருக்கிறது.

#### அறிக்கை விபரம்

இலங்கை அரசாங்கத்தின் அறிக்கையின் விபரம் வருமாறு:-

"இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொண்டதன்பேரில் 1940ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் டில்லியில் நடைபெற்ற பூர்வாங்கச் சம்பாஷணையை மீளவுந் தொடர்ந்து நடத்துவதற்கு இந்திய அரசாங்கத்தார் இசைந்தனர். செப்டம்பர் ஆரம்பத்தில் இச் சம்பாஷணை இலங்கையில் நடைபெறும்.

சமரச முடிவுக்கான வழிவகைகளைக் கண்டு பிடிப்பதற்காக நடத்தப்படும் இந்தப் பூர்வாங்க சம்பாஷணையின் விளைவாகப் பிரதானமான விஷயங்கள் எல்லாம் தீர்த்துவைக்கப்பட்டு இரு தேசங்களுக்குமிடையேயுள்ள பாரம்பரையான நேசத் தொடர்பு ஒரு மனப்பாட்டுடன் உறுதியான ஒத்துழைப்பு மனப்பான்மையில் மீளவும் ஸ்தாபிக்கப்படுமென்று நம்பப்படுகிறது.

இந்திய அரசாங்க வர்த்தகப்பேச்சுக்களை நடத்த இன்னும் ஆயத்தமாக இல்லாததால் அது பின்னுற் குறிப்பிடும் ஒரு திகதியில் நடைபெறும்.

#### இந்திய கோஷ்டியின் விபரம்

சிம்லா, ஆக 24

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க 1940ம் ஆண்டு நவம்பர் மாசத்தில் முடிவடைந்த இலங்கை-இந்திய சம்பாஷணையை மீளவும் நடத்துவதற்கு இந்திய அரசாங்கம் சம்மதித்திருப்பதாக இன்று அறிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பாஷணை செப்டம்பரில் இலங்கையில் நடைபெறும்.

வர்த்தகப் பேச்சுக்களை நடத்துவதற்கு இந்திய அரசாங்கம் இப்பொழுது ஆயத்தமில்லாததனால், இந்தப் பேச்சுக்கள் பின்னுல் நடைபெறும்.

இந்தியகோஷ்டி அங்கத்தவர்கள் பெயர்கள் வருமாறு:-

ஸேர். கிர்ஜாசங்கர்பாய் (தலைவர்) ஸேர். மிர்ஸா இஸ்மாயில், திரு. டி. ஆ. வெங்கட்டராமசாஸ்திரி, திரு. டி. ஜிருதர் போர்டு.

இந்தியத் தூதுக் கோஷ்டியில் மிஸ்டர் ஜி. எஸ். போஸ்மனும் திரு. ஏ. வித்தல்பாயும் உத்தியோக சம்பந்தமுள்ள ஆலோசனையாளர்களாக இருப்பார்கள். திரு. பாய் தூதுக்கோஷ்டியின் காரியதரிசியாகவுமிருப்பார்.

இலங்கையில் இந்திய அரசாங்க ஏஜெண்டாகவிருக்கும் திரு. டி. என். எஸ். இராகவன் இந்தியத் தூதுக்கோஷ்டிக்கு ஒத்தாசை புரிவார்.

இந்தியத் தூதுக்கோஷ்டியில் உத்தியோக சம்பந்தமுள்ள அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டிருப்பது தென்னாபிரிக்காவுக்குத் தூதுக்கோஷ்டிகள் அனுப்பப்பட்ட முறையைப் பின்பற்றியதாகுமென்று கூறப்பட்டிருக்கிறது.


### விசேஷ அறிவித்தல்

சம்பூரண கைரேகை பலன், ஆருடம் (சித்தனை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

கிரகஸ்புடம், தச வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவநிலை முதலிய கணித வகைகளும், மகா தெசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசரபலன், கால சக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

நா. சின்னத்துரை
போக்கத்தை,
கைதடி வடக்கு, கைதடி.

Y 67 20.7.41—19.7.42


# அன்பும்சமயமும்

1-ம் பக்கத்தொடர்ச்சி

கேட்டுத் தக்கிக்கிருள். தனது நாயகனுடன் இறந்தால் சுவர்க்கம் கிடைக்குமென்று எண்ணுகிறுள். அல்லது இவ்வுலகத்திலே தனக்குக் கீர்த்தியுண்டாகும் என்று நினைக்கிருள். அன்றேற் கணவனிறக்க பின்னர் உயிர்வாழின் உலகத்தார் தூற்றுவர் என்று அஞ்சுகின்றுள். இங்ஙனம் சிலகாரணங்களைக் கொண்டு அக்நாயகி தன் கணவனுடன் சகமனஞ் செய்தல் இடையன்பாகும். மேற்கூறப்பட்ட தலையன்பு இடையன்பு என்னும் இரண்டுமல்லாதது கடையன்பாகும். இங்ஙனம் நாயகிநாயகனது பெயர் கேட்டளவில் வசமழிதல் தலையன்பும், அவனைக் கண்டவுடன் வசமழிதல் இடையன்பும், அவனைக் கூடினவுடன் வசமழிதல் கடையன்புமாம். அவ்வாறே பக்குவமடைந்த ஆன்மாவும் ஆன்மநாயகருடைய பெயர் கேட்டவுடன் வசமழிதல் தலையன்பும், அவரைக் கண்டவுடன் வசமழிதல் இடையன்பும், அவரைக் கூடினவுடன் வசமழிதல கடையன்புமாம். நாயகனது பெயர் கேட்டுழி வசமழியும் நாயகிக்கு, அது கேட்டலோடு காண்டல் கூடல்களும் நிகழ்ந்தவழி முறுகிவளரும் அன்பின் பெருக்கம் இத்துணைத்தென்று கூறுதல் கூடாது. அதுபோலவே ஆன்மநாயகருடைய திருநாமத்தைக் கேட்டபோது வசமழியும் ஒருவற்கு அவரைக் காண்டல் கூடல்களும் நிகழ்ந்தவழி முறுகிவளர்ந்த தீவிரமாகிய அன்பின் பெருக்கத்தை இத்துணைத் தென்று கூறுதல் கூடுமோ!

கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலை யிந்திர னரசினைக் கனவிலும் வெஃகேன்
மால யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்மையே வேண்டுவன் தமியேன்

என்று வீரவாகுதேவர் சுப்பிரமணியப் பெருமானிடம் வேண்டுதல் செய்தது அந்நுவிதநிலையை விளக்குகின்றது. இதுவே தீவிரதரமாகிய தலையன்பு. இத்தகைய உண்மையான தலை அன்பு கருமயாகம், தவயாகம், செபயாகம், தியானயாகம், ஞானயாகம் முதலியவற்றாற் கிட்டாது. சிவபெருமான் பக்தியாகஞ் செய்வோருக்கே வசப்படுவர்

கருமமா தவஞ் செபஞ்சொல் காசறு மாதி ஞானம்
புரிபவர் வசம தாகிப் பொருந்திடேம் புரையொன் றின்றித்
திரிவறு மன்பு செய்வோர் வசமதாய்ச் சேர்ந்து நிற்போ
முரைசெய்வோ மவர்மு னெய்தி யவருளத் துறைவோ மென்றும்.

—வாயுசங்கிதை.

மேலே சொல்லப்பட்ட அன்பு, அனேக இலக்கண இலக்கியங்களைச் சந்தேக விபரீதமறத் தெளிந்தமையினாலே கிட்டக் கூடியதன்று. வேதசிவாகமங்களிலே போந்த பதி பசு பாச இலக்கணங்களை வாசித்துக் கற்றறிந்துகொண்டோம் என்னும் அகங்காரத்துக்கும், அளவுகடந்த வித்வசாமர்த்தியத்துக்கும், குசாக்ரமதி நுட்பத்துக்கும் அணுத்துணையேனும் எட்டாது. ஆனால் அநந்தகோடி முற்சென்மங்களிலே செய்து ஈட்டிய தவத்தினாலும் திருவருளினாலுமே கிட்டும்.

அன்பு சைவசமயத்துக்கு மிகவும் இன்றியமையாததென்று மேலே கூறப்பட்டது. அன்புள்ளவன் வேதசிவாகமங்களில் விலக்கப்பட்டவற்றைச் செய்யத்துணிய மாட்டான். சைவநூல்களில் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்தற்கு அன்பு அவசியம் வேண்டும். அன்பில்லாவிடத்து வருணச்சிரம தருமங்கள் தழைத்தோங்கா.

# திருவள்ளுவர் சமயம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"நீழ்புகழ்மாறன் புலவரைப் போற்றுது புத்தேளுலகு" "செவியுணவிற் கேள்வியுடையா ரவியுணவி னான்றாரோடொப்பர் நிலத்து" "இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா ரமையார் தோளஞ்சுபவர்" எனவும் முறையே வருங் குறட் பாக்களில் வைத்து, இங்கு வானம் மழை வறக்குமாயின் தேவர்க்கும் விழாவும் வழிபாடும் நிகழாவெனவும், தென் திசையின்கண் வாழும் தம் முது குடித் தென்லோரையும், தெய்வத்தையும், விருந்தினரையும் சுற்றத்தினரையுந் தன்னையுமோம்புதல் இல்வாழ்வார்க் கின்றியமையாத கடமையாமென்பதும், மகளிர் தங்கணவரை வழிபட்டு அவர் சொற்படி நடப்பாராயின் வானவர் வதியும் துறக்க நாடு புகுவரெனவும் இவ்வுலகத்திற் பொன்றுது நிற்பதான புகழை யொருவன் உடையனாயின் அவனையே வானாடு போற்று மலது தன் கண் உள்வானவரை அது பேணுதெனவும், நூன்பொருள் கேட்டலாகிய செவியுணவைப் பெறுகின்றவர் அவியுணவைப் பெறுந் தேவரோடொப்பரெனவும், தன் மனையாள் மாட்டுப் பெறுகின்ற சிற்றின்பத்தையே விழைந்து அவட்கு அஞ்சி நடப்போர் வானின்கண் வதியும் அமரரைப்போற் செல்வமுடையாராயினும், பெருமை யெய்தாரெனவும் கூறி விளக்குமாற்றுன் நன்கறியக்கிடக்கின்றது.

இனிப் பூதவாதியின் முடிந்த கொள்கை கடவுளெனவொருபொருளில்லையென நிறுவுதலேயாகும். மற்றெமது ஆசிரியராகிய திருவள்ளுவனாரோ வெனின், தமதருமபெரும் நூலாகிய திருக்குறளின் முதன்கண்ணே "கடவுள் வாழ்த்தெனவோர் அதிகாரம் வகுத்துக்கொண்டு, அதன்முழுமுதற் பொருளாகிய கடவுளை "ஆதிபகவன்" "வாலறிவன்" "மலர்மிசையேகினுன்" "வேண்டுதல்வேண்டாமையிலான்" "இறைவன்" "பொறிவாயிலைந்தவித்தான்" "தனக்குவமையில்லாதான்" "அறவாழி யந்தணன்" "எண்குணத்தான்" "இறைவன்" எனவும் பிறவதிகாரங்களில் "குடி செய்வலென்னு மொருவர்க்குத் தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்" "தெய்வந் தொழாஅள்" "ஐயப்படாஅது அகத்தது உணர்வானைத் தெய்வத்தோடொப்பக் கொளல்" என்வுங் கூறிக் கடவுளுண்மையை நன்கு நிலைநாட்டுகின்றாதலின் அவரைப் பூதவாதியெனக் கூறல் எட்டுணையும் பொருந்தாதென்க.

மற்றொருசிலர், ஆசிரியர் திருவள்ளுவர் தம்முடைய அன்னையாகிய ஆதியையும், தந்தையாகியபகவனையுங் கூறக் கருதி ஆதிபகவனெனக் கூறினுரேயன்றி பரம்பொருளாம் கடவுளைக்கூறக் கருதினுரல்லவெனக் கூறுவர். அவ்வாறு யின் "தமது தாய்தந்தையரையே உலகிற்கெல்லா முதல்வரெனக் கூறினரெனல் வேண்டுமன்றோ பொருந்தாமையின் "அகர முதலவெழுத்தெல்லா மென்னுமுவமை எடுத்துக் காட்டிப் பின் உலகிற்கெல்லாம் ஒரு முழுமுதற்கடவுளுண்டென்று அறிவுறுத்திய அச் சொற்றொடருக்கு அங்ஙனம் பொருளுரைத்தல் வெறும் போலியாகுமென்க. அல்லதூஉம் அம் முதற் செய்யுளின்கண்ணுள்ள ஆதிபகவன் எனுஞ் சொற்றொடருக்கு மாத்திரம் உரைகூறின் அக்கடவுள் வாழ்த்தென்னு மதிகாரத்தின்கண் கடவுளியல்பை விரித்துக்கூறும் ஏனை; ஒன்பது செய்யுட்களுக்கும் அங்ஙனமே பொருளுரைத்த லாகாமையானும் "தெய்வத்தோடொப்பக் கொளல்" எனப் பிறண்டும் ஆசிரியர் கூறுஞ் சொற்றொடர்களெல்லாம் கடவுளையே நன்கு விளக்கிக் காட்டுதலானும் அவ்வாறுரைத்தல் மறைவழக்கோடும் ஆன்றோர் வழக்கோடும் மாறுகொள்வார் கூற்றெனவிடுக்க.

(வரும்)

## கவர்னர் மனைவியின் யுத்த சகாயம்

### இரத்தம் கொடுத்துதவ முன்வந்திருக்கிறுர்

ஷில்லாங், ஆக 20—

அஸ்ஸாம் கவர்னரின் மனைவி லேடி ரீட் யுத்த சம்பந்தமாக இரத்தம் கொடுத்து உதவும் தொண்டர் கோஷ்டியில் தம்மையுஞ் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டு அதற்கான பரிசைக்கும் போயிருந்தார். அவர் மற்றும் பலர் தம்மைப்போல் முன்வந்து உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

## மியான்வாலிக்கருகில் வகுப்புக் கலகம்

மியான்வாலி, ஆக 19—

மியான்வாலி டிஸ்திரிக்டைச் சேர்ந்த வான்பச்சரான் என்ற இடத்தில் நேற்று ஒரு வகுப்புக் கலவரம் நடந்தது. இதன் காரணமாக இருவர் கொல்லப்பட்டனர். ஐவருக்குக் காயம், பசோ ஒருவர் சூரானை விற்றது சம்பந்தமாகவே அடிகலகம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

## கவி தாகூருக்கு யப்பானியக் கவியின் புகழ்மாலை

டோக்கியோ ஆக 23—

ஜப்பான் இந்திய சங்கம், இந்திய சுதந்திர லீக், டோவா டோஷிகை என்னும் சங்கங்களின் ஆதரவில் இன்று லோஜோஜி ஆலயத்தில் ரவீந்திரநாத தாகூரின் ஞாபகார்த்தமாக ஒரு பிரார்த்தனை நடைபெற்றது.

ஜப்பானிய கவியான யோன் நோகூசி கவியரசர் தாகூரைப் பெரிதும் புகழ்ந்து ஒரு பிரசங்கஞ் செய்தார்.


கலியிலும் தெய்வத் திருவிளையாடல் காண வேண்டும் பக்தர்கள்

பழநி ஆண்டவரைப் பிரார்த்தியுங்கள்.

உங்கள் பக்திக்கேற்பப் பழநி ஆண்டவர் அருள்பாலிப்பார். படிப்பு, உத்தியோக உயர்வு, நல் மணம் யாவும் சித்திக்கும். காம நக்ஷத்திரத்தால் மாதக் கார்த்திகை தோறும் அர்ச்சனை செய்து 1 வருடம் வரை தவறாது தபால் மூலம் பிரசாதம் அனுப்ப வருட சந்தா ரூபா 6—75

P. நடராஜபண்டாரம்
மலைக்கோவில் அயன்மிராஸ் பழநி

Q 92 A 25.8.41—24.11.41 (சி)


## பீஹார் பழைய பிரதம மந்திரிக்குக் கை முறிந்தது

### சிறையிற் சறுக்கி விழுந்தார்

பாட்னு ஆக 21

பீஹார் பிரதம மந்திரியாக விருந்த ஸ்ரீகிருஷ்ண சின்ஹ ஹஸாரிபாக் சிறையிற் சறுக்கி விழுந்ததால் அவரது கையெலும்பு ஒடிந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. எக்ஸ்ரே சோதனைக்காக அவரை ராஞ்சிக்கு அழைத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.

## உலகம்பலவிதக் கதை

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

மாளும் சொன்னதுதான், அதோடு அந்தச் சின்னம்மாளுஞ் சொன்னது" என்றுன் கிருஷ்ணன். "ஐயோ, நான் போகவேண்டிய இடத்திற்கு ஆவசியகம் போக வேண்டுமே, ஏன் அப்படிச் சொன்னர்கள்" என்று சொல்ல, இராமன் "அப்படியல்ல ஐயா, நீங்கள் தயவு செய்து ஒரு தரம் வந்து போவது தான் நலலது; இல்லாவிட்டால் அந்தப் பிள்ளைகள் மனவருத்தப்படுவார்கள்" என்று பரிந்து கேட்க அந்த வாலிபன் உடன்பட்டு ரதத்தில் ஏறித் திருப்பிக்கொண்டு இராமனுடன் மடத்திற்குப் போய்ச் சேர்ந்தான்; அவன் வரவைக்கண்டவுடனே சாமியம்மாள் ஒருமான் தோலை மடத்திண்ணையில் இட்டு அதன்மேல இருக்கச் செய்து உபசரித்தாள். மடத்துவாசலின் உட்புறத்தே நின்ற அமிர்தம் இராமனைக் கூப்பிட்டு ஏதோ மெல்லச் சொல்ல, இராமன் "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி வெளியே வந்து வாலிபனிடம் "ஐயா, சற்றே இருங்கள், இதோ வந்துவிடுகிறேன்" என்று தெரிவித்து விட்டு வேகமாகப் போனுன்.

(வரும்)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் பருத்தித்துறை மு. ராம. மு. சே. சேவுகன்செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்

| நம். | உ. | ரூ. சத. | ஊர் பெயர் நகை. |
|---|---|---|---|
| | | | 1939-ம் ஆண்டு ஜனவரி |
| 2371 | 4 | 35 | பருத்தித்துறை வ. ஐயாமுத்து கருகமணிக்கோர்வை 1 |
| 2450 | 9 | 7 | அல்வாய் தெற்கு வே. சிவகுரு இமி லெ கல்தோடு சோடி 1 |
| 2567 | 18 | 15 | செட்டித்தெரு வ. முத்தையா மாற்றுக்குறைவு பெட்டி மோதிரம் 1 |
| 2680 | 26 | 15 | அல்வாய் தெற்கு க. முத்தச்சாமி இமி பறதக்கம் 1 |
| 2732 | 31 | 30 | பருத்தித்துறை மு. சாகுல் கமீது ஒற்றை வயிரச்சன்னம் வைத்த கிறுகுச்சி சோடி 1 |
| | | | பிப்ரவரி ௴ |
| 2767 | 4 | 35 | பருத்தித்துறை மு. சாகுல் கமீது சுமார் 25 செண்டு உள்ள மட்டம் வி. சன்னம் ஒன்று வைத்த மோதிரம் 1 |
| 2800 | 6 | 30 | புலோலி கிழக்கு சி. கு. இரத்தினசபாபதி இமி கவுத்தோர் 1 |
| 2881 | 13 | 50 | பருத்தித்துறை ச. மாணிக்கம் கம்பிக் காப்பு சோடி 1 |
| 2889 | 13 | 40 | புலோலி தெற்கு வே. கணபதிப்பிள்ளை இமி பதக்கம் 1ம் மேற்படி தோடு சோடி 1 |
| 2938 | 18 | 40 | புலோலி மேற்கு க. வல்லியப்பர் இமி பதக்கம் 1ம் சிமிக்கி வாழி சோடி 1ம் வெள்ளிக்கட்டுக் கம்பியுடன் கொண்டைப்பூ 1 |
| 3052 | 28 | 35 | வியாபாரிமூலை த. சபாரெத்தினம் இமி முகப்பு சோடி 1ம் கு அரைப்பவுண் 1 |
| | | | மார்ச்சு ௴ |
| 3124 | 7 | 19 | மாதனை வ. நாகலிங்கம் இமி தோடு சோடி 1 |
| 3173 | 12 | 60 | பருத்தித்துறை மு. அமிர்தலிங்கம் இமி மோதிரம் 1ம் முத்துப்பிசு 1ம் மஞ்சக்கல் பதக்கம் 1 |
| 3248 | 19 | 60 | செட்டித்தெரு இ. செல்லமாணிக்கம் கினால் காப்பு சோடி 1 |
| 3275 | 22 | 10 | புலோலி மேற்கு சி. வயிரமுத்து சில பாசியில்லாத பதக்கம் 1 |
| 3337 | 27 | 15 | புலோலி மேற்கு க. முருகேசு இமி தோடு சோடி 1 |
| | | | ஏப்பிரல் மாசம் |
| 3401 | 1 | 10 | செட்டித்தெரு இ. செல்லமாணிக்கம் இமி சில கல்லில்லாத இ தோடு சோடி 1 |
| 3409 | 2 | 12 | பருத்தித்துறை க. அன்னமுத்து இமி தோடு சோடி 1 |
| 3416 | 2 | 17 | புலோலி கிழக்கு வ. முருகுப்பிள்ளை இமி பதக்கம் 1 |
| 3431 | 4 | 25 | புலோலி கிழக்கு க. கிருஷ்ணர் சாப்புக்கல் லொக்கட்டுடன் செயின் 1 |
| 3512 | 11 | 70 | கரணவாய் தெற்கு ம. கந்தையா பிளேன் செயின் 1 |
| 3688 | 28 | 15 | அல்வாய் வடக்கு ஆ. சுப்பிரமணியம் இமி இன திருகுடன் தோடு சோடி 1 |
| | | | மே மாசம் |
| 3946 | 22 | 65 | புலோலி கிழக்கு த. முத்துலிங்கம் சிறு அச்சுக்காப்புசோடி 1ம் சிறு வளையல் காப்பு சோடி 1 |
| | | | ஜூன் மாசம் |
| 4094 | 5 | 50 | பருத்தித்துறை த. முத்துலிங்கம் வளையல் காப்பு சோடி 1-ம் சிறு சங்கிலி 1 |
| 4198 | 17 | 25 | அல்வாய் தெற்கு க. வேலுப்பிள்ளை கெடிகாரச் சங்கிலி 1 |
| | | | ஜூலை மாசம் |
| 4456 | 9 | 15 | செட்டித்தெரு ம. மரிமுத்து இன கோர்க்கி இல்லாத அருணுச்சோடி 1 |
| 4713 | 28 | 11 | அத்தாய் இ. கந்தையா இமி தோடு சோடி 1 |
| 4739 | 31 | 16 | புலோலி கிழக்கு க. இராமச்சந்திரன் இமி பெண்டன் 1 |
| | | | ஆகஸ்டு மாசம் |
| 4909 | 17 | 70 | புலோலி தெற்கு பு. கதிர்காமர் பளுதகம்பிப் பூராணட்டிய 1 |
| 4958 | 21 | 45 | பருத்தித்துறை சி. சந்திரசேகரர் சிறுவளையல் காப்புசோடி 1 |
| 5037 | 26 | 6 | புலோலிகிழக்கு இ. செல்லமாணிக்கம் இமிமோதிரம் 1 |
| 5078 | 29 | 9 | புலோலிகிழக்கு மு. வேலுப்பிள்ளை பிசுகோக்கி 1 |
| | | | நவம்பர் மாதம் |
| 5829 | 1 | 60 | பருத்தித்துறை சி. கு. க. ரெத்தினசபாபதிஇமிடிம்மியில்லாத பதக்கம் 1ம் டை கவுத்தோர் 1ம் டை பின்கோர்க்கி 1ம் டை மோதிரம் 2 |
| 5890 | 8 | 15- | மாதனை க. கார்த்திகேசு கசிவ பின்னைக்காப்பு 1 |
| 5962 | 14 | 10 | பருத்தித்துறை பொ. இளையதம்பி இன திருகுடன் இமி தோடு சோடி 1 |
| 5989 | 17 | 190 | செட்டித்தெரு சி. கு. கனகசபை செட்டி இமி முகப்புடன் இரட்டைப்பட்டுக் குண்டுச் சங்கிலி 1 |
| 5990 | 17 | 140 | செட்டித்தெரு சி. கு. கனகசபை செட்டி செட்டிக் காப்பு சோடி 1 |
| 6067 | 22 | 5 | பருத்தித்துறை இ. சின்னத்தம்பி இன இமி திருகில்லாத குச்சி 1 |
| | | | டிசம்பர் மாதம் |
| 6251 | 7 | 100 | பருத்தித்துறை ச. தியாகராசா இமி முகப்புடன் அச்சுக் காப்பு சோடி 1 |
| 6347 | 16 | 6 | புலோலி கிழக்கு சி. கனகசபை உத்திராக்கக்காயில் பொன் போட்ட குப்பி 1 |

விற்பனவு நிகழும் விஷுவருஷம் ஆவணி௴ 30-ந் தேதி (15-9-41) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை பிற நீக்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விஜயகமுதலியார் குழந்தைவேலு

வெந்திஸ் மேஸ்தர்

Mis 88 25&28-8-41

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்.கிழக்கு மு. ராம. மு. சே. சேவுகன்செட்டியார் கடையில் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல. | தி. | ரூ. சத. | ஊர் பெயர் நகையின் விபரம் |
|---|---|---|---|
| | | | 1939 ஜனவரி |
| 2603 | 1 | 13 | வண்கிழக்கு க. சோலைமலை ஆசாரி இமி தோடு சோடி 1 |
| 2621 | 2 | 230 | சங்கானை மு. சின்னத்தம்பி இமி டிம்மியுடன் முரிச்சுக்குத்தி அட்டியல் 1, முகப்புடன் தகட்டுக்காப்பு சோடி 1 |
| 2644 | 4 | 20 | சித்தங்கேணி செ. நாகலிங்கம் இள. காதோலை சோடி 1 |
| 2656 | 5 | 16.50 | வண்கிழக்கு சு. வயிரமுத்தன் காட்டுக்கடுக்கன் சோடி 1 |
| 2730 | 13 | 45 | வண்மேற்கு க. அப்புத்துரை சங்கிலி 1 |
| 2739 | 13 | 28 | கல்வியங்காடு அ. சபாரத்தினம் அரும்புத்தடை 4 டைமன் தடை 2 பெட்டி மோதிரம் 1 |
| 2826 | 22 | 300 | அராலி ம. பொன்னம்பலம் மருக்கன் கல்பதக்கத்துடன் கம்பிப்பூராணட்டியல் 1 அச்சுக்காப்பு சோடி 1 தாயித்து 1 குண்டு 4 அரைப்பவுண் 1ம் கோர்த்த தாலியுடன் திருக்கண்டமாலை 1 |
| 2948 | 31 | 60 | ஆனைப்பந்தியடி கா. கந்தையா குண்டுச்சங்கிலி 1 |
| | | | பெப்ரவரி௴ |
| 3115 | 14 | 220 | நயினாதீவு ரா. பொன்னுத்துரை அச்சுமிளகுக்காப்புசோடி 2 சங்கிலி 1 |
| 3130 | 15 | 10 | ஆனைப்பந்தியடி கா. கந்தையா யந்திரத்தகடு 1 |
| 3145 | 16 | 13 | வேலணை க. முத்துத்தம்பி அருடிரக்கூடு 1 |
| 3184 | 20 | 59 50 | மாவிட்டபுரம் தி. சுப்பிரமணியம் இமி பெண்டன் 1 இமி புரோச்சு 1 |
| | | | மார்ச்சு௴ |
| 3387 | 8 | 110 | நல்லூர் கா. செல்லத்துரை மாலைப்பதக்கம் 1 |
| 3441 | 13 | 34 | நல்லூர் ந. சபாரத்தினம் இமி பறதக்கம் 1 |
| 3454 | 14 | 15 | அராலி வை. சிவனடியார் பின்கோக்கி 1 |
| | | | ஏப்பிரல் ௴ |
| 3748 | 10 | 6 | சீர்வேலி க. கந்தையா இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 3812 | 16 | 9 | இளவாலை ச. ஞானமுத்து சிறு கிளாவர் மோதிரம் 1 |
| | | | மே ௴ |
| 4059 | 10 | 8 | கோண்டாவில் ஆ. சின்னத்துரை இமி தோடு ஜோடி 1 |
| 4086 | 14 | 9 | வண்ணார்பண்ணை சா. அருளம்பலம் அரும்புத்தடை ஜோடி 1 |
| 4092 | 14 | 24 | வட்டுக்கோட்டை கா. கந்தையா பிளேன் செயின் 1 |
| | | | ஜூலைமாசம் |
| 4759 | 11 | 7 | கோண்டாவில் கா. சுப்பையா கிளாவர்மோதிரம் 1 |
| 4782 | 13 | 6 | வண்கிழக்கு கா. சண்முகம் இமி கிளாவர் குச்சி சோடி 1 |
| | | | ஆகஸ்டுமாசம் |
| 5173 | 17 | 220 | சங்கானை மு. சின்னத்தம்பி இமி முகப்புடன் அச்சுக்காப்பு சோடி 1 பதக்கத்துடன் டைமன் அட்டியல் 1 |
| 5226 | 21 | 10 | கொக்குவில் ச. பொன்னையா இமி தோடு சோடி 1 |
| 5233 | 21 | 20 | மண்டதீவு வ. வேலுப்பிள்ளை மருக்கன் காதோலை சோடி 1 |
| 5252 | 22 | 8 | நல்லூர் சி. பொன்னுத்துரை இமி மோதிரம் 1 |
| | | | செப்டம்பர் மாசம் |
| 5463 | 7 | 20 | ஆனைப்பந்தியடி மு. நடராசா அரைஞாண்கொடி 1 |
| 5560 | 13 | 40 | பெரியகடை மு. நாகராசா நவரெத்தினமோதிரம் 1 இமி மோதிரம் 1 பெட்டி மோதிரம் 1 |
| 5728 | 26 | 92 | வேலணை செ. சரவணமுத்து கெட்டிக்கொலிசு சோடி 1 |
| | | | அக்டோபர் மாதம் |
| 5829 | 6 | 55 | பெரியகடை மு. நாகராசா இமி மாலைப்பதக்கம் 1 |
| 5882 | 11 | 18 | கோப்பாய் வே. பொன்னையா இமி அருடிரக்கூடு 2 |
| 6011 | 21 | 360 | பிராம்பத்தை மு. சின்னத்தம்பி இமி பதக்கத்துடன் பின்னலட்டியல் 1 முகப்புடன் கெட்டிக்கொலிசு ஜோடி 1 முகப்புடன் பிலிக்காப்பு சோடி 1 இரண்டுபட்டுக்குண்டுச்சங்கிலி 1 |
| | | | நவம்பர் மாதம் |
| 6155 | 6 | 6 | நல்லூர் எ. ஞானசேகரம் வெள்ளைக்கல்தோடு சோடி 1 |
| 6383 | 28 | 95 | நீராவியடி இ. சோமசுந்தரம் இமி மாலைப்பதக்கம் 1 |
| | | | டிசம்பர் மாதம் |
| 6444 | 3 | 7 | விமன்காமம் இ. சட்டநாதர் இமி குச்சி சோடி 1 |
| 6446 | 3 | 6 | வண்கிழக்கு மா. கதிரவேலு வெள்ளைக்கல் தோடுசோடி 1 |
| 6518 | 8 | 8 | ஆனைப்பந்தியடி கா. கந்தையா காவடி குச்சிசோடி 1 |
| | | | 1940 ஜனவரி |
| 6773 | 1 | 8 | சண்டிக்குளி ஆ. முருகேசு இமி தோடுஜோடி 1 |
| 6810 | 5 | 10 | தட்டாதெரு சி. அய்யாத்துரை இமி பஞ்சாயுதம் 1 |
| 6813 | 6 | 10 | ஆவரங்கால் ச. அண்ணாச்சாமி ஐயர் இமி மோதிரம் 1 |
| 6820 | 6 | 15 | பெருமாள்கோவிலடி வெ. சின்னத்துரை இமி தோடு சோடி 1 மோதிரம் 1 |
| 7065 | 26 | 14 | சுண்ணாகம் வ. தாமோதரம்பிள்ளை திருமாங்கல்யம் 1 குண்டு வைத்த சுதேசிக் காசு 1 |

விற்பனவு நிகழும் விஷு வருஷம் ஆவணி மாதம் 23-ந் தேதி (8.9.41) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் எடுபட்டநகை பிறநீக்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. சுப்பிரமணியம்பிள்ளை

வெந்திஸ் மேஸ்தர்.

(Mis 87. 25 & 28-8-41)

## திருச்சிரேடியோ நிகழ்ச்சி

(கீ 396)

**வெள்ளி ஆக்கஸ்ட் 29**

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 கீதாரம்பம் (இசைத்தட்டு) 7-40 தமிழில் செய்திகள் 7-50 துரான்-மு-ஷரீப் 8-00 இஸ்லாமிய துதிகள் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 ஏ. வி. நாராயணப்பா பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 டாக்கிப்பாட்டுக்கள் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஏ. வி. நாராயணப்பா பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்தியகீதம் 5-15 டி. எஸ். வைத்தியநாதன் டி. எஸ் ராஜரத்தினம் நாகஸ்வரம் 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கொழும்பு ஸ்ரீமதி எல். லோககுப்பிரமண்யம் வீணை, பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 இலக்கிய வாசகம் 7-15 ராமுவும், சோமுவும் 7-35 தமிழில் செய்திகள் 7-50 டி. எஸ். வைத்தியநாதன் டி. எஸ் ராஜரத்தினம் நாகஸ்வரம் 8-30 உலகவிவகாரங்கள் 8-45 கொழும்பு ஸ்ரீமதி எல். லோகசுப்ரமண்யம் வீணை, பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

**சனி ஆக்கஸ்ட் 30**

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 திருவாசக விளக்கம் 8-00 பஜனை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 பி. ஆர். சிவசங்கரம் பிள்ளை பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 எஸ். ஜீ கிட்டப்பா (இசைத்தட்டு) 1-15 ஸ்ரீமதி செல்லம்மாள் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 35 பி. ஆர். சிவசங்கரம்பிள்ளை பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 ஸ்ரீமதி டி. வி ஜனகம் பாட்டு 2-30 ஒலிபரப்புமுடிவு

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5.00 மதராஸில் உள்ளபடி 5-45 இசைப்பயிற்சி 6 00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 ஸ்ரீமதி டி. வி ஜனகம் பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 செய்திக்கடிதம் 7-15 தாளவாத்தியக்கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 மதராஸில் உள்ளபடி 9-15 இடைவேளை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10 00 ஒலிபரப்பு முடிவு.

**ஞாயிறு ஆக்ஸ்ட் 31**

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 தேவாரதனை 8- 5 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 டி. நரஸிம்ஹாச்சாரி பாட்டு 9 00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

12-00 குரல் வகைகள் (இசைத்தட்டு) 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 படப்பாட்டுகள் (இசைத்தட்டு) 2 00 தமிழில் செய்திகள் 2-05 டி. நரஸிம்ஹாச்சாரி பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்தியகீதம் 5-15 ஸ்ரீமதி கோமளம் ஸ்ரீமதி ஸ்ரீனிவாஸ் பாட்டு 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 ஏ. என். சந்திரசேகரையா வீணை 6-30 கிராமாந்திரநிகழ்ச்சிகள் 7-00 கே. எல். லைகல் (இசைத்தட்டு) 7-15 கலையா தொழிலா 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீமதி ஸ்ரீனிவாஸ் பாட்டு 8-30 எங்கள் தபால்பெட்டி 8-45 ஏ. என். சந்திரசேகரையா வீணை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.


## குயின்பிருண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை — நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த ஊரூத, நல்ல சத்தமுள்ள யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.

c/o S. Veeragathipillai & Sons.

( Y. 21 11-8-40—10-8-41.)

வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்

## புடவைகள்

இப்போது யாழ்ப்பாணத்தில்ஒவ்வொருவீட்டிலும் பேசப்படும் வார்த்தைகளாம்

ஒருமுறை பரீக்ஷித்தால்— எப்போதும் விரும்பப்படுவது.

ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

| | |
|---|---|
| வேட்டிகள் | டிரில்லுகள் |
| சால்வைகள் | சூற்துணிகள் |
| சேலைகள் | ரகூர்கள் |
| சாரங்கள் | 'ஷேட்' துணிகள் |
| கப்பாய்கள் | ஷீட்டுகள் |
| துவாய்கள் | பஞ்சணைஉறைகள் |
| லோங்குளோத்ஸ் | மேசைத்துணிகள் |
| மல்லுகள் | பப்ளின்கள் |
| பெட்ஷீட்டுகள் | யன்னல்துணிகள் |

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.

எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.

பெரியகடை, யாழ்ப்பாணம்.

வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ், (இந்தியாவில் ஸ்தாபிதமானது): (அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

Mis 127. 11-10-40 –

S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1941)

## பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம

மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்க்ஷை வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார்பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள் மேற்படி பரீட்க்ஷைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதி யொன்றன் விலை ரூபா 1 சதம் 10

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்.

இந்துசாதனம் 20-8-40 — மனேஜர்.

## திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுத்தது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம், உயர்ந்த வட்டி வீதங்களோடு தவணைக்கும் நிரந்தரமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம், காரியாதிகாரி.

(வி) (Y. 22. 1-11-40 to 31-10-41)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.


சி. எம். சாமி

## மன்மதக் குளிகை

மிகுந்த பலத்தையும் ரத்த விருத்தியையும் உண்டாக்கும்

அநேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழப்பட்டது; இதற்கு நிகரான ஔடதம் வேறில்லை ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம்,

இழந்த சத்தியும் பலமும் திரும்ப வரும், நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வசீகரசக்தி, இவற்றை தந்தாவல்லது, எவ்வித பலஹீனம் இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீக்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருக்குணம் விளங்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்,

ஆர்டர்களுடன் முன்பணம் அனுப்ப வேண்டும்

60 குளிகை ரூபா 5 — 20 குளிகை ரூபா 2

தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S

கிளை ஆபீஸ்:-

1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 143 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y 221 31-3-430-3.41

## புதிய வெளியீடுகள்

சிவிக்ஸ் (Civics) எனப்படும்

## குடி இயல் நூல்

இலங்கை வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.

(அங்கீகார இலக்கம், 21 A & B / 41 திகதி 3-7-41)

6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50

7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைப் பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன.

மானேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.

"காயகல்ப" அனுகூல சிகிச்சை

காயசித்தி, தந்தவக்குறைவு, சலரோகம், வாதம், சிறுபிள்ளை வாதம், வலி, தோற்புரை வியாதிகள், குட்டம், ஆதியாம் நோய்களுக்கு அனுகூலமான சிகிச்சை.

மேகராசா

சலரோகம், நீரழிவு ('அல்புமென்' அடையல், புளித்திராவகம், அதிக நீரழிவு ஆகிய எந்தநிலையிலிருப்பினும்) க்குக் கைகண்டமருந்து. பத்தியம் இல்லை. 15 நாட்களுக்குக் காணக்கூடிய போத்தல் ஒன்றுக்கு விலை ரூபா 4.00.

சண்டிக்குளித்தபாற்கந்தோர்த் தலைவர்பின்வருமாறுஎழுதுகிறார்:- நீரழிவுக்குரிய உங்கள் மேகராசா என்னும் மருந்தை நான் ஒரு மாசமாக உபயோகித்தேன். என் சலம் சுத்தமாகி விட்டது. இந்தச் சிகிச்சைக்காக உங்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்ஙனம், P. நடராஜா.

பின்வருவோரைக் கலந்தாலோசியுங்கள்:—

டக்டர் K. T. மங்களம் R. I. M. P. (சென்னை)

M. S. V. S. அங்கத்தவர், கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Q 82 7-8—6.11.41



விளம்பர விகிதம்

முதன்முறைக்கு ஒருகலம் ரூபா 10.00 அரைகலம் ரூபா [illegible] சதுரகலம் ரூபா 4.00 ஓர் அங்குலம் ரூபா 1.00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

[illegible]

பத்திரக்கிரயம்

[illegible] தமிழ் ரூபா 6.00 இங்கிலீஷ் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீஷ் தமிழும் 12.00
[illegible] 9.00 இங்கிலீஷ் தமிழும் 13.00

தனிப்பிரதி சதம் 5

முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday August 28th 1941.